# வானவில்

# VAANAVIL

| இதழ் 159 | பங்குனி 2024 |
|---|---|
| ISSUE 159 | March 2024 |


# இந்திய ஆதிக்கம் அதிகரித்துச் செல்கிறது!



இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கம் என்பது புதியதொரு விடயம் அல்ல. இரண்டு நாடுகளும் அருகருகாக அமைந்திருந்ததால் நவீன வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பலமான உறவுகள் இருந்து வந்துள்ளன. இராமாயணம் என்ற காவியமே இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் ஒரு இலக்கியமாக இருந்து வருவது அதற்கொரு உதாரணம். பெரும்பாலும் அந்த உறவுகள் கலாச்சார, மத, வர்த்தக உறவுகளாகவே இருந்து வந்துள்ளன.

இலங்கையில் வாழும் இரண்டு பிரதான இனங்களான சிங்களவர்களினதும் தமிழர்களினதும் மூதாதையர்களும், அவர்களது கலாச்சாரம், மொழி, மதம் என்பனவும் இந்தியாவிலிருந்தே இலங்கைக்குள் பரவின என வரலாற்றாசிரியர்களால் பலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இடையே அந்த உறவுகள் அரசியல் ரீதியான ஆதிக்கம் நிறைந்தவையாகவும் இருந்துள்ளன. தென்னிந்தியாவை ஆட்சி செய்த மன்னர்கள் சிலர் குறிப்பாக சோழர்கள், இலங்கையின் வடக்கு, கிழக்கு, மத்திய பகுதிகளைக் கைப்பற்றி பல ஆண்டுகள் ஆட்சியும் புரிந்துள்ளனர். இலங்கையை ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் சிலரின் படைகள் தென்னிந்தியாவை ஆட்சி செய்த சோழ, சேர, பாண்டிய அரசர்களுக்கிடையில் ஆதிக்க யுத்தங்கள் நடந்த காலத்தில் அவர்களின் அழைப்பின் பேரில் சில மன்னர்களுக்கு உதவ அங்கு சென்றனவாயினும், இலங்கை மீதான சோழப் படையெடுப்பே வரலாற்றில் நின்று நிலைத்து இந்தியா மீதான சிங்கள மக்களின் அச்சத்துக்கான பிரதான தூண்டுகோலாக இன்று வரையும் இருந்து வருகின்றது.

இரு நாடுகளினதும் நவீன வரலாற்றை எடுத்து நோக்கினால் இரண்டுமே பிரித்தானிய காலனிய நாடுகளாக இருந்து இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலத்தில் ஏறத்தாழ ஒரே காலகட்டத்திலேயே சுதந்திரத்தைப் பெற்றன. இந்தியாவில் காந்தியின் தலைமையின் கீழ் நடந்த சுதந்திரப் போராட்டத்தின் வீச்சே இலங்கைக்கும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது என்ற பலமான கருத்தும் உண்டு.

இந்தியாவின் ஏனைய எல்லை நாடுகளைப் போல, இலங்கை இந்தியாவுடன் தரை மார்க்கமான ஒரு எல்லையைக் கொண்ட நாடு அல்ல. இரு நாடுகளையும் குறுகிய தூர கடல் பகுதியே பிரிக்கின்றது. இருப்பினும் இரு நாடுகளுக்கும் இடையே வரலாறு சில பிரச்சினைகளை விட்டுச் சென்றுள்ளது.

அவற்றுள் முதலாவதும் முக்கியமானதுமான பிரச்சினை பிரித்தானியர் இலங்கையில் தாம் உருவாக்கிய பெருந்தோட்டங்களில் கூலித்தொழில் செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வந்த இந்திய வம்சாவழியினர் பிரச்சினை. அது தவிர சுதந்திரத்துக்குப் பின்னர் ஏற்பட்ட இரண்டு பிரதான பிரச்சினைகள் தமிழகத்திலிருந்து இலங்கைக்குள் நுழைந்த கள்ளக் குடியேற்றக்காரர் பிரச்சினையும், இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் சட்டவிரோதமாக பொருட்கள் கொண்டு வந்த கள்ளக்கடத்தல் பிரச்சினையுமாகும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சினையாகும்.

ஆனால் இந்தப் பிரச்சினைகளில் பெரும்பாலானவை இலங்கையில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் இருந்த காலத்திலும், இந்தியாவில் லால்பகதூர் சாஸ்திரி மற்றும் இந்திராகாந்தி தலைமைகளிலான காங்கிரஸ் அரசாங்கங்கள் இருந்த காலத்திலும் ஓரளவு வெற்றிகரமாகத்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

## நூறு சிந்தனை மலரட்டும்

# ஜனாதிபதித் தேர்தலில் உயிருட்டப்படும் 'அரகலய' நிகழ்ச்சிநிரல்

இலங்கை அரசியலில் ஏறத்தாள மூன்றரை வருடங்களின் பின்னர் மீண்டும் தேர்தல் களை கட்டியுள்ளது. பாராளுமன்றத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா முதலில் நடைபெறும் என்ற ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாகுமாறு மார்ச் 19ஆ திகதி தனது மந்திரிசபைக்கு அறிவித்தல் விட்டுள்ளார். இறுதியாக ஜனாதிபதித் தேர்தல் 2019 நவம்பர் 16ஆ திகதியும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் 2020 ஓகஸ்ட் 5ஆ திகதியும் நடைபெற்றன. நடைபெற்றன. ஆகையால் முதலில் ஜனாதிபதித் தேர்தலே இந்த ஆண்டு நடைபெற வேண்டும்.

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளைப் போன்றே, இலங்கையும் முதலாளித்துவ ஜனநாயகமுறை அமைப்பைக் கொண்ட ஒரு நாடு. அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதியை நேரடியாகத் தெரிதல், பாராளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என நான்குவிதமான தேர்தல்கள் நடைபெறுகின்றன. தேர்தல் சட்டத்தின்படி 4 வருடங்களுக்கு ஒருமுறை உள்ளூராட்சி சபை மற்றும் மாகாணசபைத் தேர்தல்களும், 5 வருடங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களும் நடைபெற வேண்டும்.

இலங்கையில் இறுதியாக மாகாணசபைத் தேர்தல்கள் மேல் மாகாணசபை உள்ளிட்ட 3 மாகாணங்களில் 2014 இல் நடைபெற்றன. இதற்கு முன்னதாக, கிழக்கு மாகாணசபை உட்பட 3 மாகாணங்களின் தேர்தல்கள் 2012 இலும் வடக்கு மாகாணசபை உட்பட 3 மாகாணங்களின் தேர்தல்கள் 2013 இலும் நடைபெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கடைசியாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் 2018 இல் நடைபெற்றன. உடனடியாக நடத்த வேண்டிய மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தல்களை நடத்தாது காலங்கடத்தி வரும் அரசு, ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகின்றது.

2019 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கோத்தபாய 3 வருடங்கள் கூட தனது ஆட்சியை பூர்த்தி செய்யவில்லை. 'அரகலய' என்ற போராடத்தின் மூலம் அவரைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி பதவியில் ரணில் விக்கிரமசிங்க அமர்த்தப்பட்டார். இந்த 'அரகலய' போராட்டத்தின் சூத்திரதாரிகள் இப்போது ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு சார்பான ஒருவரை வெல்ல வைக்கும் முயற்சியில் காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளார்கள் போல் தெரிகின்றது.

இலங்கையைச் சேர்ந்த சுகாதார கொள்கைகளுக்கான நிறுவனம் (Institute for Health Policy - IHP) ஜனாதிபதித் தேர்தல் குறித்து 'இலங்கை கருத்துக் கண்காணிப்பு ஆய்வு' (Sri Lanka Opinion Tracker Survey - SLOTS) என்ற தலைப்பில், 2021 ஒக்ரோபர் மாதத்திலிருந்து மாதாந்தக் கருத்துக் கணிப்பொன்றினை நடத்தி வருகின்றது. இந்த நிறுவனம் பிரதானமாக ரணில் விக்கிரமசிங்க (UNP), சஜித் பிரேமதாசா (SJB), இலங்கை பொதுசன முன்னணி (SLPP) மற்றும் அனுரகுமார திசாநாயக்க ஆகிய 4 வேட்பாளர்களை முன்னிறுத்தி, அவர்களை ஆதரிப்போரின் எண்ணிக்கைகளை இக்கருத்துக்கணிப்பின் ஊடாக வெளியிட்டு வருகின்றது. இக்கருத்துக்கணிப்பில் இலங்கை சுதந்திரக்கட்சி கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2023 ஆண்டு ஜனவரியிலிருந்து அனுரகுமார திசாநாயக்க IHP இன் கருத்துக்கணிப்பில் முன்னணியில் இருந்து வருகிறார். மேலும் 2023 ஒக்ரோபர் – டிசம்பர் மாதங்களில் எடுக்கப்பட்ட கணிப்பின் முடிவுகளின்படி, கருத்துக்கணிப்பில் பங்குபற்றியவர்களில் 50 சதவீதத்திற்கு அதிகமானோர் தேசிய மக்கள் சக்தியின் (National People's Power - NPP) தலைவர் அனுரகுமார திசாநாயக்காவை ஆதரித்துள்ளனர். இந்த முடிவுகள் பகிரங்கப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே, அவரை வெளிநாட்டு தூதுவர்கள் சந்திப்பதும், இந்திய மத்திய அரசு அவரை டெல்லிக்கு அழைத்ததும், அவர் அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணமாவதும் இடம்பெற்று வருகின்றன.

கருத்துக்கணிப்புகளின் உண்மைத் தன்மையை ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது. மேலும் இவ்வாறான முடிவுகளை தேர்தலுக்கு முன்னதாக வெளியிடுவதன் வாயிலாக, கருத்துக்கணிப்பில் முன்னணியில் இருக்கும் குறிப்பிட்ட வேட்பாளரை நோக்கி மக்களின் கவனத்தைத் திருப்பலாம் என்ற நோக்கத்தை கருத்துக்கணிப்புகள் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதாவது குறிப்பிட்ட ஒரு வேட்பாளரை வெற்றி கொள்ள வைப்பதற்காக திட்டமிடப்பட்டும் கருத்துக்கணிப்புகள் முதலாளித்துவ ஜனநாயகம் நிலவும் நாடுகளில் நடத்தப்படுகின்றன.

இலங்கையின் பழைய இரண்டு பெரிய தேசியக் கட்சிகள் (UNP, SLFP) உடைந்து தற்போது நான்கு தேசியக் கட்சிகளாக உள்ளன. இவர்களுடன் ஐந்தாவதாக ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் இணைந்துள்ளது. இந்த ஐந்து தேசியக் கட்சிகளும் சிங்கள இனத்தவரின் ஆதரவை மாத்திரமே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இவர்களிடையேயான வெற்றி தோல்விகளை எந்தக் காரணிகள் தீர்மானிக்கின்றன, பழைய தேசியக் கட்சிகளுக்கு எதிரான அலை என்ற அம்சம் மெல்லமெல்ல இலங்கை அரசியலில் மேலோங்கி வருகின்றதா, வேட்பாளர்களின் தேர்வுகள் தேர்தல் வெற்றிகளில் முக்கிய பங்கை ஆற்றுகின்றதா போன்ற விடயங்களை கருத்துக்கணிப்புகளின் ஊடாக தெளிவாக அறிந்து கொள்ள முடியாது.

பிரதானமாக இரு மொழிகள் பேசப்பட்டாலும், இலங்கை சிங்கள இனத்தை பெரும்பான்மையாகக் கொண்டு, நான்கு இனங்களை உள்ளடக்கிய ஒரு நாடு. வரலாற்றில் தேர்தல்களில் அவ்வப்போது சிறுபான்மை இனங்கள் தீர்மானகரமான சக்திகளாக இருந்து வந்தபோதிலும், அண்மைக்காலங்களில் தேர்தல்களின் வெற்றியையும் தோல்வியையும் பெரும்பான்மையான சிங்கள இனத்தவரே தீர்மானித்து வருகிறார்கள்.

தற்போதைய இலங்கையில் உள்ள கட்சிகள் முழுக்க, முழுக்க தேர்தல் கட்சிகளாகவே உள்ளன. அதாவது தேர்தல் காலங்களில் மாத்திரமே இக்கட்சியினர் விழித்தெழுந்து மேடைகளில் தோன்றி வாக்குக் கேட்பதோடு நின்று விடுவார்கள். முன்னொரு காலத்தில் இலங்கையில் இடதுசாரிக்கட்சிகள் மாத்திரமே ஓரளவு மக்கள் சார்ந்த கருத்துகளை ஆணித்தரமாக முன்வைத்து தேர்தல்களில் போட்டியிட்டுள்ளன. அதேபோன்று தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது, மக்கள் நாளாந்தம் முகங்கொடுக்கும் பிரச்சனைகளுக்காகவும் வீதிகளில் இறங்கி போராடியும், மக்களை அரசியல்மயப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக அவர்களுடனான சந்திப்புகளையும் கருத்தரங்குகளையும் நடாத்தியும் உள்ளார்கள். இந்த இடதுசாரி அரசியல் பாரம்பரியம் 1977 ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் முற்றாக அழிந்து போய்விட்டதாகவே இலங்கையின் மூத்த இடசாரிகள் கவலைப்பட்டுக் கொள்கிறார்கள்.

நிலப்பிரபுத்துவ காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் முதலாளித்துவ ஜனநாயகம் என்பது எப்போதுமே முற்போக்கானது. எனினும், அது எப்போதுமே பணம் படைத்தவர்கள் மற்றும் அந்நிய சக்திகளின் எடுபிடிகள் அதிகாரத்தில் அமர்ந்து பல மோசடிகள் செய்து, அடுத்த தேர்தல்வரை மக்களை ஏமாற்ற வாய்ப்பளிப்பதற்கு ஏதுவான போலியான ஜனநாயகம் என்ற மாபெரும் உண்மையையும் மறுக்க முடியாது. ஆனால் ஒரு நாட்டை நிர்வகிப்பதற்கு குறைந்த பட்சமாக இதுதான் மக்களின் கைவசமுள்ளது. அதனால் இலங்கையில் நடக்கும் எந்த தேர்தலாயினும், அதில் தேச விரோதிகளையும் அந்நிய சக்திகளின் முகவர்களையும் தோற்கடிப்பது நாட்டின் அனைத்து மக்களினதும் முழுப்பொறுப்பு.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** *sunvaanavil@gmail.com*

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**


***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# புரட்சி எனும் தொழிலும் லெனின் வழிகாட்டுதலும்

மார்க்சிய சித்தாந்தத்தை கடைப் பிடித்து அதை அமுல்படுத்துவதற்கு மிக முக்கியமான தேவையாக லெனின் கருதியது ஒரு புரட்சிகரமான கட்சியை உருவாக்க வேண்டும் என்பதுதான். ரஷ்யப் புரட்சி நடந்து கொண்டிருந்த தருணத்தில் லெனின் அவர்கள் தனது 'புரட்சிகரக் கட்சி' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த கடுமையாகப் போராடினார். "ஜனநாயக மத்தியத்துவம்" அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பை அவர் உருவாக்கியது தான் அவரின் சிறப்பான பங்களிப்பு எனலாம்.

ஒரு புரட்சிகரக் கொள்கைக்கு அடிப்படைத் தேவை, அமைப்புதான் என லெனின் கூறுகிறார். "என்ன செய்ய வேண்டும்?"என்ற தனதுநூலில் லெனின் அவர்கள், ஒரு புரட்சிகரக் கொள்கை இல்லாமல் ஒரு புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது என அடித்துக் கூறுகிறார். 1902 இல் வெளியிட்ட தனது நூலில் அவர் பொருத்தமான – சரியான அமைப்பு ஒன்றின் மூலம் மட்டுமே புரட்சிகரக் கொள்கையை, புரட்சிகர இயக்கமாக மாற்றிக் காட்ட முடியும் என்று விவரிக்கிறார். லெனினின் கூற்றுப்படி அதிகாரத்தை அடைவதற்காக பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தில் அதற்கு, அதன் அமைப்பு மட்டுமே ஆயுதமாக இருக்க முடியுமே தவிர, வேறு ஆயுதங்கள் ஏதும் இல்லை என்கிறார்.

ஒரு புரட்சிகரமான கட்சிக்கு தேவையான அமைப்பு முறையை வளர்த்து உருவாக்குவதற்கான போராட்டத்தில், 1900–1906 காலகட்டத்தில் லெனின் அவர்கள் "ரஷ்ய சோசலிச ஜனநாயக தொழிலாளர் கட்சி" க்குள் இருந்து கொண்டே ஈடுபட்டார். அந்தக் காலகட்டத்தில் ஜெர்மனியில் தோன்றி, பின் ஐரோப்பா முழுவதும், உழைக்கும் வர்க்கத்தின் ஒரே அரசியல் கட்சியாக "சோசலிச ஜனநாயக கட்சி" ஓர் உதாரணமாக இருந்தது. ரஷ்ய சோசலிச ஜனநாயக தொழிலாளர் கட்சி போல்ஷ்விக், மென்ஷ்விக் என்று பிளவுபட்டது. அந்த பிளவுக்கான முக்கியமான காரணமாக இருந்தவை அந்த கட்சிக்குள் இருந்த உறுப்பினர் மற்றும் அந்த அமைப்பின் குணாம்சங்கள்தான்!



**வர்க்க உணர்வு**

அமைப்பு பற்றி லெனினின் கருத்துக்களுக்கு போல்ஷ்விக் கட்சியின் அமைப்பில் செயல்படுத்த வாய்ப்பு இருந்தது. பொருளாதாரத்தை மட்டும் முன்னிறுத்தி வாதிட்டவர்களுக்கு எதிராக, ரஷ்யாவில் லெனின் அவர்கள், உழைக்கும் வர்க்க இயக்கத்திற்கு மத்தியில் போராட வேண்டியிருந்தது. கட்சியை கட்டுவதற்கு பொருளாதார கோரிக்கைகளுக்காக மட்டும் தொழிற்சங்க இயக்கம் நடத்துவதே போதுமானது என்று அவர்கள் கருதினார்கள்.

*பிரகாஷ் காரத்*

பொருளாதார கோரிக்கைகளுக்காக உழைக்கும் வர்க்கம் தன்னெழுச்சியாகவே போராடிக் கொள்ளும் என்பதை லெனின் எதிர்த்தார். பொருளாதாரத்திற்கான போராட்டம் அதாவது தொழிற்சங்கப் போராட்டம் என்பது உழைப்பாளிகள் சுரண்டலுக்கும், தங்களது மோசமான வேலை நிலைக்கும் எதிராக கிளர்ந்தெழுவதில் இருக்க வேண்டும் என கருதினார். இந்த உணர்வு ஒன்றுதான் தொழிற்சங்கம் தன்னிச்சையான போராட்ட உணர்வை வளர்ப்பதற்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்றார்.

எல்லா நாடுகளின் வரலாறுமே "உழைக்கும் வர்க்கத்தின் சொந்த முயற்சியின் காரணமாகவே தொழிற்சங்க உணர்வு வளர்கிறது என்பதை உணர்த்துகிறது" என்றார் லெனின். இந்த உணர்வு ஓர் ஆரம்பக் கட்ட நிலை என்கிறார். புரட்சிகரமானவர்களை உள்ளடக்கிய வலுவான அமைப்பு ஒன்று தலைமை ஏற்று வழிநடத்தாமல் நடைபெறும் இத்தகைய தன்னிச்சையான பாட்டாளி மக்களின் போராட்டங்கள் ஒரு நேரிய 'வர்க்கப் போராட்டமாக' மாறாது என்பது லெனின் கருத்தாகும்.

அமைப்பு இல்லாத ஒன்றிலிருந்து உருவாகும் சோசலிச உணர்வு அல்லது வர்க்க உணர்வு என்பது "உள்ளீடற்ற ஒன்று" என்று லெனின் கூறுகிறார். "கம்யூனிஸ்ட் அறிக்கை" கூறுவதை லெனின் வலியுறுத்தி "ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் அரசியல் போராட்டமே" என்கிற மார்க்சியத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகின்ற கட்சி என்பதே அதன் உள்ளடக்கமாகும் அதுவே வர்க்க உணர்வை உழைப்பாளிகளிடம் ஏற்படுத்தும் என்கிறார்.

**முன்னணிப் பங்கு**

லெனினைப் பொறுத்தவரை, சோசலிச ஜனநாயகக் கட்சி என்பது தொழிலாளி வர்க்கத்திற்கு மட்டுமேயானது. அது எவ்வளவுதான் உணர்வும் ஈடுபாடும் இருந்தாலும் அது எல்லோருக்குமானது அல்ல! (அதாவது உழைப்பவர் மட்டுமே அதில் உறுப்பினராக இருக்கலாம்) அதாவது கட்சியினை முன் நடத்தும் படையாக – "முன்னணி"யாக தொழிலாளி வர்க்கத்தின் "மேம்பட்டவர்கள் – பற்றற்றவர்கள்" மட்டுமே விளங்க வேண்டும்! இதன்

உள்ளார்ந்த பொருள் என்னவென்றால் தொழிலாளி வர்க்கத்தில் போராட்டக் குணமும், வர்க்க உணர்வும் மிக்கவர்கள் மட்டுமே கட்சியில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் தொழிலாளர்கள் மத்தியிலும் மற்றும் பொதுவான வெகுஜன அமைப்புகளிலும் பணியாற்ற ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதுதான்!

தொழில் திறனும் நேர்த்தியும் மிக்க புரட்சியாளர்கள் ஓர் அமைப்புக்கு தேவை என்கிறார் லெனின். "புரட்சியாளர்களின் அமைப்பு என்பது புரட்சியை மட்டுமே தங்களது முதலும், முடிவுமான தொழிலாகக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்"! தொழில் திறன் மிக்க புரட்சியாளர்களை உள்ளடக்கிய முன்னணிப் படை. எந்தவோர் அவசரச் சூழலுக்கும் எதிர்வினையாற்றுவதாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார் லெனின். 1905 இல் நடைபெற்ற ரஷ்யப் புரட்சி, லெனின் ஆயிரக்கணக்கான போராட்ட குணமிக்க – வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களை கட்சிக்கு சேர்ப்பதற்கு வாய்ப்பாக்கியது.

சோசலிச ஜனநாயக உணர்வுமிக்க உழைப்பாளிகளை புரட்சி உற்பத்தி செய்ததாக லெனின் அவதானித்தார். அதன் பிறகு உருவான போல்ஷ்விக் கட்சி அதனுடைய மையமாக தொழில் திறன்மிக்க புரட்சியாளர்களை அக்கட்சியின் பல்வேறு மட்டங்களிலும், அவர்களுடன் முழு நேர ஊழியர்களாக இல்லாத தொழிலாளர் வர்க்க உறுப்பினர்களையும் கட்சியில் கொண்டிருந்தது. கட்சியில் முன்னணிப் படையை உருவாக்குவது என்பது, மேம்பட்ட, பற்றற்ற தொழிலாளர்கள் மூலம் கட்சியைக் கட்டுவது என்பதாகும். மிக முற்போக்கான கொள்கையால் வழி நடத்தப்படும் கட்சி ஒன்றினால் மட்டுமே இந்த "முன்னணிப் படைவீரர்" என்ற பாத்திரத்தை நிறைவேற்றமுடியும் என்று லெனின் தெளிவு படுத்துகிறார். –(தொகுதி 5: பக்கம் 37, ஆங்கிலப்பதிப்பு)

"கம்யூனிஸ்ட் அறிக்கை" கம்யூனிஸ்டுகளின் பங்கு – பாத்திரத்தை அருமையாக தெளிவுபடுத்துகிறது. "உழைக்கும் வர்க்க இயக்கங்களின் போக்கையும், நிலைமையையும், அவற்றின் உடனடி பலன்களையும் நன்கு உணர்ந்தவர்களாக இருக்கும் (மிகவும் முன்னேறிய உறுதிமிக்க பிரிவாக இருக்கக் கூடிய) தொழிலாளர்களே, உழைக்கும் வர்க்க கட்சிகளின் முன்னணி வீரர்களாக ஒவ்வொரு நாட்டிலும் இருக்கிறார்கள். அதனால்தான் அவர்களால் உழைப்பாளி வர்க்கத்தின் மீது ஈர்ப்பு செலுத்த முடிகிறது."

மார்க்சும், ஏங்கல்சும் வரலாற்றுச் சிறப்பு மிக்க "அறிக்கை"யில் முன்வைத்த கொள்கையை அமுல்படுத்துவது என்பதே, லெனினின் முன்னணிப் படையை கட்சியில் உருவாக்குவதாகும். உழைக்கும் வர்க்க அரசியல் உணர்வை உள்வாங்கியவர்களை கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு, முன்னணிப்படையாக இயங்கிக் கொண்டே இருக்கின்ற வழிமுறையைப் பின்பற்றும். உழைக்கும் வர்க்கத்தின் ஆதரவு மட்டும் இன்றி, சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட அனைவரையும் இணைத்துக் கொண்டு இது இயங்கும். இப்படிப்பட்ட முன்னணிப் படை தான், உழைக்கும் வர்க்கத்திலே பல்வேறு பிரிவுகளாக உள்ள பலதரப்பட்ட உழைப்பாளர்களையும் ஒன்றிணைத்து அவர்களிடம் தொழிலாளர் வர்க்க உணர்வை ஊட்ட முடியும். அது மட்டுமல்ல மற்ற ஆதரவு வர்க்கங்கள் – பிரிவினர் அனைவரையுமே புரட்சிக்கு அணி திரட்ட முடியும். அதிலிருந்து முன்னணிப் படைக்கு புதிய வீரர்களை ஈர்க்க முடியும்.

**மையப்படுத்துதல்**

முன்னணி கட்சி என்பது மேலிருந்து கீழ் வரை மையப்படுத்தப்பட்டு ஒரே கட்சியாக, மையப்படுத்தப்பட்ட கட்சியாக இருக்க வேண்டும். ஜார் மன்னனின் அடக்குமுறை ஆட்சியில் தலைமறைவாக கட்சியை நடத்த வேண்டியிருந்ததால் இப்படிப்பட்ட மையப்படுத்துதல் தேவைப்பட்டது என்றாலும் கூட, மையப்படுத்தப்பட்ட தலைமை மூலமே, அரசியல் கொள்கை ரீதியில் ஒன்றுபட்ட கட்சியை வழிநடத்த முடியும். அரசியல் ரீதியாக ஒன்றுபட்டுச் செயல்பட, மையப்படுத்தப்பட்ட தலைமை அவசியம்.

அரசியலாகவும் அமைப்பு ரீதியாகவும் வலுவான, மையமாக கட்சி செயல்பட பல உள்ளூர் கட்சி செய்தித்தாள்களுக்கு பதில், ரஷ்ய மொழியில் மட்டும் ஒரே செய்தித்தாளை வெளியிட லெனின் வலியுறுத்தினார். ஒரு செய்தித்தாள் என்பது கூட்டான செயல்பாடு – பிரச்சாரகர் என்பது மட்டு மின்றி கூட்டான அமைப்பை ஏற்படுத்துவதற்கும் அது உதவும் என்கிறார் லெனின். மையப்படுத்தப்பட்ட அதிகாரம் மிக்க கட்சி என்பது, பலம் மிக்க முதலாளித்துவ அரசை, தனது வலுவான மைய கட்சி அமைப்பு மூலம் எதிர்கொள்வதற்கு அவசியம் என்கிறார் லெனின்.

**கட்சியின் உள்ளே ஜனநாயகம்**

கட்சியின் எல்லா படிநிலைகளிலும் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவது, கட்சியின் மையப்படுத்தும் கொள்கையுடன் இணைந்ததாகும். "என்ன செய்ய வேண்டும்?"என்ற நூலை எழுதிய காலத்தில், நாடு முழுவதும் அடக்குமுறை தலைவிரித்தாடியதால் கட்சியின் எல்லா கமிட்டிகளுக்கும் உட்கட்சித் தேர்தல் நடத்த முடியாததால், மத்தியத்துவக் கொள்கை மேலோங்கியது.

1905 புரட்சிக்குப்பின் அரசியல் சுதந்திரம் இருந்ததால், கட்சியின் எல்லா மட்டங்களிலும் கமிட்டிகளை உருவாக்க தேர்தல் முறையை அமுலாக்க லெனின் வலியுறுத்தினார். கட்சியின் கீழ்மட்ட கமிட்டிகளுக்கு சுய அதிகாரம் கிடைக்கும் வகையில் மத்திய கமிட்டியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. 1906 இல் ரஷ்ய சோசலிச ஜனநாயக தொழிலாளர் கட்சியின் நான்காவது மாநாட்டில் "ஜனநாயக மத்தியத்துவம்" என்ற கொள்கை கட்சி விதிமுறைகளில் சேர்க்கப்பட்டது.

கட்சிக்குள் விரிவான விவாதம் நடத்தப்பட்டு ஜனநாயக முறைப்படி முடிவெடுத்த பின், பிறகு எடுக்கப்பட்ட முடிவை அனைவரும் ஒற்றுமையுடன் நிறைவேற்ற வேண்டும் என்பது தான் ஜனநாயக மத்தியத்துவம் (democratic centralisation) என்பதாகும். லெனினிய கட்சி அமைப்பு கொள்கை என்பது கொள்கை மற்றும் நடைமுறை பற்றிய தீவிரமான விவாதத்தை தவிர்ப்பதற்கு அல்ல. விரிவான, ஆழமான விவாதத்திற்கு பிறகு, அமைப்பு செயல்பாட்டில், தலைமையின் அரசியல் வழிகாட்டலை ஒற்றுமையுடன் அமுல்படுத்துவதே ஆகும்.

**ஜனநாயக மத்தியத்துவம்**

அமைப்பு பற்றிய லெனினிய

கொள்கையின் தெளிவான முடிவே ஜனநாயக மத்தியத்துவம். மத்தியத்துவமும், ஜனநாயகமும் பின்னிப் பிணைந்ததுதான் ஜனநாயக மத்தியத்துவம். இதன் அடிப்படையில்தான் புரட்சிகரக் கட்சி இயங்கும். ஜனநாயக மத்தியத்துவம் என்பது கட்சியின் அடிப்படை என்பதுடன் கூடவே, கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைப் பண்பும் இதுவாகும்.

சோசலிச ஜனநாயகக் கட்சிகள், முதலாளித்துவ அமைப்பில் இயங்க வேண்டி இருப்பதால் அவைகளுக்கு புரட்சிகர அமைப்பு தேவை இல்லை. எனவே ஜனநாயக மத்தியத்துவம் என்பது அவைகளுக்கு ஒவ்வாத விஷயமாகும். ஆனால் ஒரு கம்யூனிஸ்ட் கட்சிக்கு அது முதலாளித்துவத்தை தூக்கி எறிந்துவிட்டு, ஆளும் ஆட்சி முறையை மாற்றி, அதற்கு பதில் சோசலிசத்தை அமைப்பதற்கு, அதற்கு புரட்சிகர அமைப்பு முறை தேவை. அதன் மூலமே அது அரசியல் – தத்துவார்த்த – அமைப்புரீதியான போராட்டத்தை, சக்தி மிக்க அரசுக்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக நடத்த முடியும்.

இப்படிப்பட்ட கட்சி, நாடாளுமன்ற ஜனநாயக முறையில் தேர்தலில் போட்டியிடவும் வேண்டி உள்ளது. இருக்கின்ற ஜனநாயக வாய்ப்புகளை, அதை இருக்கும் அளவுக்கு பயன்படுத்திட வேண்டும். இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்பது, கட்சி என்பது தொழிலாளி வர்க்கத்தை அமைப்பு ரீதியாக ஒன்றிணைத்து, புரட்சிகர மக்கள் இயக்கத்தை நடத்திட, போதுமான வலுவுடன் இருக்கிறதா என்பதே கேள்வியாக உள்ளது. லெனின் பார்வையில் கட்சி என்பது மேற்கண்டவாறு புரட்சிகர மக்கள் இயக்கத்தை கட்டமைத்து நடத்துவதாக இருக்க வேண்டும். அதற்கு உழைக்கும் வர்க்கத்தினரில், அரசியல் உணர்வுடன் உள்ளவர்களை – முற்போக்காக உள்ளவர்களை, கட்சிக்கு முன்னணிப் படையாக (Vanguard) சேர்த்திட (recruitment) வேண்டும்.

இப்படிப்பட்ட அமைப்பு என்பது வர்க்கப் போராட்டங்களாலும் (class struggle), வெகுஜன இயக்கங்கள் (mass movement) மூலமாகவும் உருக்கு போன்ற உறுதிமிக்கதாக ஆக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட அமைப்பு "சட்ட ரீதியாக – பாதி சட்ட ரீதியாக - சட்ட விரோதமாக" என எல்லா நிலைமைகளையும் எதிர்கொண்டு செயல்படுவதாக இருக்க வேண்டும். நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வர்க்க, அரசியல் போராட்டத்தில் நெருக்கடிகளை சந்தித்து எதிர்கொள்ளும் வண்ணம் போராட்ட வடிவங்களை மாற்றிக் கொண்டு செயல்படுவதாக இருக்க வேண்டும். இதற்கு மையப்படுத்தப்பட்ட (centralized) கட்சி தேவை. வர்க்கப் போராட்ட உணர்வுடன் செயல்படும் கட்சிக்கு "ஜனநாயக மத்தியத்துவம்" அமைப்பு ரீதியாக பொருத்தமான வடிவமாகும். வர்க்கப் போராட்டம் என்பது ஒரு கூட்டுச் செயல்பாடு. ஜனநாயக மத்தியத்துவம் கூட்டு முடிவுக்கும் கூட்டுச் செயல்பாடுக்கும் வழி ஏற்படுத்துவது.

இது சுதந்திரமான சிந்தனைக்கும், செயல்பாட்டில் ஒற்றுமைக்கும் வாய்ப்பு தருகிறது. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் பல கம்யூனிஸ்ட் கட்சிகள் புரட்சிக்கு வாய்ப்பில்லாத சூழ்நிலையில் செயல்பட்டன. இதே நிலைதான் 21ஆம் நூற்றாண்டின் முதல் 20 ஆண்டுகள் நிலவியது. ஆனாலும் இவற்றில் பல கட்சிகள் இன்றும் தப்பி பிழைத்து செயல்பட ஒரே காரணம் ஜனநாயக மத்தியத்துவமே எனலாம். தத்துவார்த்த – அரசியல் பின்னடைவுகள் ஏற்பட்ட போதும் கட்சிகள் உயிர்ப்புடன் இருக்க காரணம் ஜனநாயக மத்தியத்துவ முறை ஆகும். இதை கைவிட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் அழிந்துவிட்டன அல்லது பிளவுபட்டு விட்டன. 1980 வரை சோசலிச நாடுகளைத் தாண்டி வெளியில் வலுவாக இருந்த இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி அழிந்ததை இதற்கு உதாரணமாக பார்க்கலாம்.

சோவியத் யூனியன் சிதைவுக்கு ஆரம்பமாக அது முதலில் ஜனநாயக மத்தியத்துவத்தை கைவிட்டது. இறுதியில் மார்க்சியத்தை கைவிட்டது. இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த பல்வேறு புரட்சிகளின் அனுபவங்கள் லெனின் அவர்களின் அமைப்பு பற்றிய கொள்கையையும், ஜனநாயக மத்தியத்துவத்தையும் நமக்கு அறிவுறுத்துகின்றன.

1964 இல் அமைக்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அதனுடைய யுக்திகளை உள்ளடக்கிய கட்சித் திட்டத்தை ஏற்றது. அத்துடன் ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் கட்சி அமைப்பை மறுகட்டுமானம் செய்யும் சவாலையும் மேற்கொண்டது. ஒன்றுபட்ட கட்சியில் ஏற்பட்டிருந்த திருத்தல்வாதம் (revisionism) ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை அரித்து இருந்தது. இதை சரிப்படுத்தும் பணி தொடர்கிறது. தற்போது இந்தியாவில் நிலவும் பிரத்யேகமான பிரச்சனைகள் – சூழ்நிலைகளில் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்சியை கட்டுவதற்கு, தொடர்ந்து சமரசம் இன்றி நாம் போராட வேண்டும்.

தமிழில் : மன்னை இரா.இயேசுதாஸ்

---

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

அடிப்படையிலான உற்பத்தி முறையை எப்படி ஏற்றுக் கொண்டுள்ளார்கள்? அவர்கள் விஜேவீரவின் கொள்கைகளை கைவிட்டு விட்டார்களா அல்லது முதலாளித்துவத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஆயுதத்தை கைவிட்டு விட்டார்களா? அப்படி இருந்தால் அவர்கள் ஏன் இது சம்பந்தமாக ஒரு பகிரங்க பிரகடனத்தை செய்யவில்லை? அது மட்டுமின்றி, தமது கட்சி ஸ்தாபகரின் கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பதாகச் சொல்லி அவரது நினைவு தினத்தை ஏன் வருடாவருடம் பெருமெடுப்பில் கொண்டாடி வருகிறார்கள்?

ஜே.வி.பி. தமது ஸ்தாபகத் தலைவரின் கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் இரு தடவைகள் நாட்டில் இரத்த ஆறு ஓட வைத்து, பல்லாயிரக்கணக்கானோரின் மரணத்துக்கு காரணமாக இருந்திருக்கிறது. இது பற்றி நாட்டு மக்களுக்கோ அல்லது வர்த்தக சமூகத்தினருக்கோ மேலதிக விளக்கம் எதுவும் அளிக்கத் தேவையில்லை.

(கொழும்பில் இருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' பத்திரிகையின் பெப்ருவரி 27 ஆம் திகதி பதிப்பில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தின் சாராம்சம்)

---

*பாட்டாளி வர்க்கப் புரட்சி இன்று நிலவும் சமுதாயத்தை படிப்படியாக மாற்றியமைக்கும் என்பதில் ஐயமில்லை.*

***- ஏங்கெல்ஸ்***

# ஜே.வி.பி: உண்மையா அல்லது தோற்றப்பாடா?

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கான இலங்கை அரசியல் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் கீழ்த்தரமானதாகவும் அழுக்கானதாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஒரு முன்னணி வேட்பாளர் என ஜே.வி.பி. உரிமை கோருகிறது. அதை நிராகரிப்பவர்கள், சமூக ஊடகங்களின் உதவியுடன் இந்தப் போலியான கருத்து பரப்பப்படுவதாகக் கூறுகின்றனர். இருந்த போதிலும் ஜே.வி.பி. அரசியல் தளத்தில் தான் இழந்ததை ஓரளவு மீட்டுள்ளதுடன், மக்களில் ஒரு தரப்பினர் அவர்கள் நாட்டை ஆளத் தகுதியுள்ள ஒரு அரசியல் கட்சி எனவும் நம்புகின்றனர்.

போட்டியாளர்கள் கிளப்பும் எதிர்ப் பிரச்சாரங்களால் மக்கள் மத்தியில் தம்மைப் பற்றி தவறான அபிப்பிராயம் உருவாகக்கூடும் என அஞ்சும் ஜே.வி.பி. அதைத் தடுப்பதற்கு கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. பெப்ருவரி 25 ஆம் திகதி ஒரு பகுதி வர்த்தகப் பிரதிநிதிகளிடம் உரையாற்றிய ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பனவற்றின் தலைவர் அனுர குமார திசாநாயக்க, தாம் ஆட்சிக்கு வந்தால் தனியார் சொத்துடமைகளை எடுத்துக் கொள்ளுவோம் என்ற பிரச்சாரத்தை மறுத்தார்.

உலகம் முழுவதும் மாற்றங்கள் நிகழ்வதால், அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் கூட மாறாது என்று சொல்ல முடியாது. எனவே ஜே.வி.பியும் மாற்றத்துக்குள்ளாவது இயல்பானது. ஜே.வி.பி. தனது கம்யூனிச மற்றும் தீவிரவாத நிலைப்பாட்டிலிருந்து கருத்தியல் ரீதியாக மாறி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த நாட்டிலுள்ள பல்வேறு மார்க்சிச – லெனினிச கட்சிகள் ஊழியர்கள் அடிப்படையிலான புரட்சிகரமான சிந்தனையுள்ள அமைப்புகளாக ஆரம்பத்தில் உருவாகிப் பின்னர் பல தசாப்தங்களுக்கு முன்னரே அரசியல் ரீதியாக மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன.

தனிப்பட்ட சொத்துடமை மற்றும் உற்பத்தி மீது கட்டுப்பாடு செலுத்துதல் என்பன பற்றிய திசாநாயக்கவின் கருத்துகள் ஜே.வி.பி. முன்னர் 36 பக்கங்களில் வெளியிட்ட புரட்சிகர கொள்கைப் பிரகடனத்தை




(Revolutionary Policy Declaration) மறுப்பதாக உள்ளது. “ஏகாதிபத்தியத்துக்கு மரணம், மக்களுக்கு விடுதலை! முதலாளித்துவத்துக்கு மரணம், சோசலிசத்துக்கு வெற்றி!” என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பின் அட்டையில் கம்யூனிஸ்ட் அறிக்கையிலிருந்து (Communist Manifesto) ஒரு மேற்கோள் போடப்பட்டிருந்தது. “கம்யூனிஸ்ட் புரட்சி உற்பத்தி உறவுகளில் மிகவும் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தும். பாரம்பரியமான கருத்துகளில் மிகவும் அடிப்படையான மாற்றங்களையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தும்.” என்பதே அந்த மேற்கோள்.

ஜே.வி.பி. முன்பு வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தில் பின்வரும் முக்கியமான பகுதிகள் இடம் பெற்றிருந்தன: “முழுமையான திட்டமிட்ட சோசலிச பொருளாதாரக் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்படும், தற்போதுள்ள முதலாளித்துவ கலப்புப் பொருளாதாரம் ஒழிக்கப்படும், எல்லாவிதமான வெளிநாட்டு முதலீடுகளும் நட்டஈடு எதுவுமின்றி அரசுடமையாக்கப்படும், சுதந்திர வர்த்தக வலயங்கள் ஒழிக்கப்படும், அந்த வலயங்களிலுள்ள சொத்துகளும் வர்த்தகங்களும் நட்டஈடின்றி அரசுடமையாக்கப்படும், வங்கிகளும், கடன் நிறுவனங்களும் மற்றும் சகல ஏகபோக நிறுவனங்களும் எவ்விதமான கொடுப்பனவுகள் மற்றும் நட்டஈடின்றி தேசியமயமாக்கப்படும், ஏகாதிபத்திய வங்கிகளின் கடன்களும் அவற்றுக்கு வழங்கும் வட்டியும் ஒழித்துக்கட்டப்படும், சிறிய கைத்தொழில்கள் உட்பட தனியார் சொத்துடமை திட்டமிட்ட அடிப்படையில் படிப்படியான நடவடிக்கைகள் மூலம் ஒழிக்கப்படும். ஒரு புதிய வடிவிலான நாணய முறை அறிமுகப்படுத்தப்படும்.”

ஜே.வி.பியின் ஸ்தாபக தலைவர் ரோகண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி. தலைமை இந்த பிரகடனம் பற்றி அப்பொழுது குறிப்பிடுகையில், “ இந்த கொள்கைப் பிரகடனம் முதலாளித்துவத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கப் போராட்டத்திலும், முதலாளித்துவப் பாராளுமன்றம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் அவற்றுக்கு வெளியேயான நிறுவனங்கள் என்பனவற்றுக்கான தேர்தல் பிரச்சாரங்களிலும் தலையானதாக இருக்கும். இந்த கொள்கைப் பிரகடனம் முதலாளித்துவத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஆயுதமாகத் திகழும்” என்று குறிப்பிட்டிருந்தது.

தங்களுடைய கட்சியின் உண்மையான கொள்கைப் பிரகடனம் இவ்வாறு இருக்கையில், தற்போதைய ஜே.வி.பி. தலைவர்கள் சுதந்திர வர்த்தகக் கொள்கைகளுடனும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் முதலாளித்துவ முகாம்களுடனும் எவ்வாறு ஒத்துப் போகிறார்கள்? தனியார் சொத்துடமை

**தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க…**

# “எனது மகள்கள் என்னுடைய சிறிய பறவைகள்”

கடந்த வருடம் டிசம்பர் 8 ஆம் திகதி காஸாவில் தன் ஒட்டு மொத்த குடும்பத்தையே இஸ்ரேலின் குண்டு வீச்சில் இழந்து விட்டார் அகமது அல்–கு.ஃபேரி (Ahmad al-Ghuferi). காஸா நகரில் உள்ள அவரது குடும்ப வீட்டில் இஸ்ரேல் குண்டுவீசியதில் அவரது 103 உறவினர்கள் கொல்லப்பட்டபோது, அவர் 50 மைல்கள் (80 கி.மீ.) தொலைவில் உள்ள ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை (West Bank) நகரமான ஜெரிகோ (Jericho) வில் சிக்கிக் கொண்டிருந்தார்.

**கடைசிப்பேச்சு**

ஒக்ரோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் இஸ்ரேலைத் தாக்கியபோது அகமது, டெல் அவிவ் (Tel Aviv) கட்டுமான தளத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அதைத் தொடர்ந்து நடந்த போர் மற்றும் இஸ்ரேலின் இராணுவ முற்றுகை காரணமாக தனது மனைவி மற்றும் மூன்று இளம் மகள்களிடம் அவரால் வந்து சேர முடியவில்லை. ஆனால் தொலைபேசி இணைப்புகள் அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்தில் அவர் ஒவ்வொரு நாளும் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

டிசம்பர் 8 ஆம் திகதி மாலை தாக்குதல் நடந்த நேரத்திலும் அவர் தனது மனைவி ஷிரீன் (Shireen) உடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார். தாங்கள் இறந்துவிடுவோம் என்று என் மனைவிக்கு தெரிந்துவிட்டது. எப்போதாவது ஏதாவது தவறு செய்திருந்தால் அதனை மன்னித்து விடுங்கள் என்று அவள் என்னிடம் கூறினாள். அப்படி சொல்லாதே என்று நான் சொன்னேன். அதுதான் எங்களுக்கு இடையே நடந்த கடைசி பேச்சு என்றார் அகமது. அன்று மாலை அவரது மாமாவின் வீடு மீது இஸ்ரேல் நடத்திய ஒரு பெரிய குண்டுவெடிப்புத் தாக்குதலில் அவரது மனைவி மற்றும் அவரது மூன்று இளம் மகள்கள் தலா, லானா, நஜ்லா (Tala, Lana, Najla) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

**3 மாதங்களுக்கு மேலாகியும்**

அகமத்தின் தாயார், அகமத்தின் நான்கு சகோதரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், பல சித்திகள், சித்தப்பாக்கள், அத்தைகள், மாமாக்கள்



அகமது அல்–கு.ஃபேரி (Ahmad al-Ghuferi)

ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்று பலரும் உயிரிழந்தனர். மொத்தம் 100 இற்கும் மேற்பட்டோர் இதில் இறந்தனர். இந்தக் கொடுமை நடந்து மூன்று மாதங்களுக்கும் மேலாக ஆகிவிட்டது. ஆயினும் சிலரது உடல்கள் இன்னமும் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளன. சென்ற வாரம் அவரது இளைய மகளுக்கு இரண்டு வயது பூர்த்தியாகியிருக்கும். அகமது இன்னும் அந்த துக்கத்திலிருந்து வெளிவரமுடியாமல் தவிக்கின்றார். தனது குழந்தைகளின் உடலை கைகளில் ஏந்தவோ அல்லது அவசரமாக நடத்தப்பட்ட அவர்களது இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளவோ முடியாத அவர், இப்போதும் அவர்கள் அனைவரும் உயிருடன் இருப்பது போலவே பேசுகிறார்.


**லூஸி வில்லியம்ஸன் (Lucy Williamson)**


கண்களில் இருந்து வழியும் கண்ணீருக்கு கீழே அகமத்தின் முகம் சலனம் ஏதுமின்றி உள்ளது. “எனது மகள்கள் என்னுடைய சிறிய பறவைகள்” என்று அவர் கூறினார். “நான் ஒரு கனவில் இருப்பது போல் உணர்கிறேன். எங்களுக்கு என்ன நடந்தது என்பதை என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை” அவர்களது நினைவுகளால் நிலை குலைந்து போகக்கூடாது என்பதற்காக, தனது தொலைபேசி மற்றும் மடிக்கணனி திரைகளில் இருந்து தனது மகள்களின் படங்களை அவர் அகற்றிவிட்டார்.

உண்மையில் என்ன நடந்தது என்பதை தப்பிப்பிழைத்துள்ள சில உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடமிருந்து அவர் கேட்டுத்தெரிந்து கொண்டார். அவருடைய குடும்ப வீட்டின் வாசலை முதலில் ஏவுகணையொன்று தாக்கியதாக அவர்கள் சொன்னார்கள். “அவர்கள் அவசரமாக வெளியேறி அருகில் உள்ள என் மாமா வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு ஒரு போர் விமானம் அந்த வீட்டையும் தாக்கியது” என்று அவர் சொன்னார்.

**10 நிமிடங்களுக்கு ஒரு தாக்குதல்**

அகமதின் குடும்பம் வசித்துவந்த நான்கு மாடிக் கட்டிடம் காஸா நகரின் ஷேய்டோன் (Zeitoun) பகுதியில் உள்ள சஹாபா மருத்துவ மையத்தின் (Sahaba Medical Centre) மூலையில் இருந்தது. அது இப்போது இடிந்துபோன ‘கொன்கிரீட்’ மேடாகக் காட்சி அளிக்கின்றது. இடிபாடுகள், ஒரு பச்சை பிளாஸ்டிக் கப், தூசி படிந்த ஆடைகள் சிதறிக் கிடக்கின்றன. நொருங்கிய நிலையில் ஒரு வெள்ளி நிறக்கார் ‘கொன்கிரீட்’ பாறைகளின் கீழ் கிடக்கிறது.

வான்வழித் தாக்குதல்கள் தொடங்கியபோது மலையை நோக்கி ஓடியவர்கள் உயிர் பிழைத்ததாகவும், வீட்டில் தஞ்சமடைந்தவர்கள் கொல்லப்பட்டதாகவும் அகமத்தின் உயிர் பிழைத்த உறவினர்களில் ஒருவரான ஹமித் அல்–கு.ஃபேரி (Hamid al-Ghuferi) பி.பி.சியிடம் கூறினார். “இந்தப்பகுதி முக்கிய தாக்குதல் இலக்காக இருந்தது. என் வீட்டிற்கு அருகில் உள்ள நான்கு வீடுகளில் தாக்குதல்கள் நடந்தன. அவர்கள் ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒரு வீட்டைத் தாக்கினார்கள்” என்று அவர்

குறிப்பிட்டார். "குஃபேரி குடும்பத்தைச் சேர்ந்த 110 பேர் – எங்கள் குழந்தைகள் மற்றும் உறவினர்கள் – அங்கு இருந்தனர். ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைவரும் கொல்லப்பட்டனர்" என்றார் அவர். அவ்வாறு உயிரிழந்தவர்களில் மிக அதிக வயதானவர் 98 வயதான பாட்டி என்று கூறிய அவர், ஒன்பது நாட்களுக்கு முன்பு பிறந்த ஓர் ஆண் குழந்தையும் இறந்துபோனதாகத் தெரிவித்தார். விமானத் தாக்குதலின்போது இரண்டு பெரிய வெடிப்புகள் நிகழ்ந்ததாக அகமது என்று அழைக்கப்படும் மற்றொரு உறவினர் விவரித்தார்.

**முன்னெச்சரிக்கை எதுவுமில்லை**

"முன்கூட்டிய எச்சரிக்கை எதுவும் அளிக்கப்படவில்லை" என்று அவர் கூறினார். "இந்தப் பகுதியை விட்டு மக்கள் ஏற்கனவே வெளியேறாமல் இருந்திருந்தால் இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இப்போது அந்தப் பகுதி முற்றிலும் வித்தியாசமாகத் தெரிகிறது. ஒரு கார் பார்க்கிங், தண்ணீர் சேமிக்க ஓர் இடம், மூன்று வீடுகள் மற்றும் ஒரு பெரிய வீடு அங்கு இருந்தன. முழு குடியிருப்பு பகுதியையும் குண்டுவெடிப்பு அழித்துவிட்டது" என்று அவர் குறிப்பிட்டார்.

இடிபாடுகளில் இருந்து உடல்களை வெளியே எடுக்க உயிர் பிழைத்தவர்கள் அதிகாலை வரை வேலை செய்ததாக ஹமித் கூறினார். "விமானங்கள் வானத்தில் பறந்து கொண்டிருந்தன. நாங்கள் அவர்களை வெளியே இழுக்க முயன்று கொண்டிருந்த போது குவாட்கொப்டர்கள் (quadcopters) எங்களை நோக்கி சுட்டுக் கொண்டிருந்தன" என்று அகமத்தின் உறவினர் கூறினார். "நாங்கள் வீட்டில் அமர்ந்திருந்தோம். திடீரென்று நாங்கள் இடிபாடுகளுக்கு அடியில் இருந்தோம்," என்று உம் அகமது அல்–குஃபெரி (Umm Ahmad al-Ghuferi) பி.பி.சியிடம் கூறினார். "நான் ஒரு பக்கத்திலிருந்து மறுபுறம் தூக்கி எறியப்பட்டேன். அவர்கள் என்னை எப்படி வெளியே எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நாங்கள் எங்கள் கண்களுக்கு முன்னால் மரணத்தைப் பார்த்தோம்" என்று அவர் தெரிவித்தார்.

**"நான் என்ன தவறு செய்தேன்?"**

தாக்குதல் நடந்து மூன்றரை மாதங்கள் ஆகிவிட்டன. இப்போதும் அவர்கள் இடிபாடுகளுக்கு அடியில் புதையுண்டு இருக்கும் சில உடல்களை அடைய முயற்சி செய்து கொண்ட வண்ணமுள்ளனர். இடிபாடுகளை அகற்றித் தோண்டுவதற்காக ஒருவரை பணியமர்த்த குடும்பம் பணம் திரட்டியுள்ளது. "நாங்கள் நான்கு உடல்களை மீட்டோம்" என்று உம் அகமது அல்–குஃபெரி கூறினார். "எனது சகோதரனின் மனைவி மற்றும் எனது மருமகன் முகமது, துண்டுகளாக வெளியே இழுக்கப் பட்டனர். அவர்கள் 75 நாட்களாக இடிபாடுகளுக்கு அடியில் கிடந்தனர்" என்றார். அவர்களின் தற்காலிக கல்லறைகள், அருகிலுள்ள வெற்று நிலத்தில், குச்சிகள் மற்றும் பிளாஸ்டிக் தாள்களால் குறிக்கப்பட்டு காணப்படுகின்றன.

ஜெரிகோவில் சிக்கிக்கொண்ட அகமது அல்–குஃபேரி காஸாவிலுள்ளஅவரது உறவினர்களைச் சந்திக்கவில்லை. "என் அம்மா, என் மனைவி, என் குழந்தைகள் மற்றும் என் சகோதரர்களை இழக்க நான் என்ன தவறு செய்தேன்? நாங்கள் சாதாரண மக்கள்" என்கிறார் அவர்.

தாங்கள் வான்வழித் தாக்குதல்களால் குறிவைக்கப்பட்டதாக குடும்பம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் இஸ்ரேலிய இராணுவத்திடம் கேட்டோம். இதற்குப் பதிலளித்த இராணுவம், "அந்த தாக்குதல் குறித்து தங்களுக்குத் தெரியாது என்றும், ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் (Israel Defense Forces - IDF), பொதுமக்களின் பாதிப்பைக் குறைக்க சாத்தியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தது" என்றும் கூறியது.

அகமத்தின் குடும்பம் கொல்லப்படுவதற்கு சில நாட்கள் முன்பும் பின்பும், அல்–குஃபேரி வீட்டின் தெற்கே உள்ள ஷெஜய்யா (Shejaiyya) பகுதியில் இஸ்ரேலியப் படைகளுக்கும் ஹமாஸ் ஆயுதமேந்தியவர்களுக்கும் இடையே கடுமையான சண்டை நடந்தது. பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளுடன் ஆயுதம் ஏந்திய பலர் ஷெஜய்யாவில் இஸ்ரேலிய துருப்புக்களை அணுகுவதை தாங்கள் அடையாளம் கண்டதாக டிசம்பர் 9 ஆம் திகதி தனது தினசரி செய்தியில் இராணுவம் கூறியுள்ளது. மேலும் அவர்கள் மீது ஹெலிகாப்டர் தாக்குதலுக்கும் இஸ்ரேலிய இராணுவம் அழைப்பு விடுத்தது.

**"அன்பே என யார் அழைப்பார்?"**

காஸா பகுதியில் உள்ள ஹமாஸ் இலக்குகள் மீது போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருவதாகவும், தரைப்படை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இராணுவம் கூறியது. முன்பு அகமதின் குடும்ப வீடு இருந்த ஷேய்டோன் பகுதி, இப்போது ஐடிஎஃப் (IDF) இன் புதிய தாக்குதல்களின் மையப்புள்ளியாக உள்ளது.

தனது தந்தையுடன் ஜெரிகோவில் சிக்கிக்கொண்ட கட்டுமானத் தொழிலாளியான அகமது, இப்போதும் சில சமயங்களில் காஸாவில் எஞ்சியிருக்கும் தனது உறவினர்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கின்றார். ஆனால் தனது பிரியமான வீட்டிற்கு வெளியே பல மாதங்கள் சிக்கித் திரும்பி வரத் துடித்த அவர், இனி எப்போதாவது அங்கு திரும்பிச் செல்வாரா என்பதை அவரால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

"காஸாவில் என் கனவு சிதைந்து போனது. இப்போது யாருக்காக நான் திரும்பிச் செல்வது? என்னை யார் இனி அப்பா என்று அழைப்பார்கள்? என்னை அன்பே என்று யார் அழைப்பார்கள்? என் வாழ்க்கையே நீங்கள்தான் என்று என் மனைவி என்னிடம் சொல்லுவாள். இப்போது அதை யார் சொல்வார்கள்?" என்று ஆற்றமுடியா துயரத்துடன் அவர் குறிப்பிட்டார்.

**நன்றி : பிபிசி தமிழ்**

---

*புரட்சி என்பது உச்சக்கட்டமான ஓர் அரசியல் போராட்டம். இந்தச் சமூகத்தில் உள்ள அவலநிலையை மாற்ற விரும்பும் ஒவ்வொருவரும் புரட்சிக்கான அரசியல் போராட்டங்களிலும், புரட்சிக்காகப் பாட்டாளி மக்களைத் தயார்ப்படுத்துவதில் ஈடுபடுவதும் தலையாயக் கடமையாகும்.*

*ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் இறுதியில் ஒரு புரட்சியை நோக்கித் தள்ளப்படுமானால் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள், பாட்டாளி மக்களின் நலன்களை சொல் மூலம் பாதுகாத்து வருவதைப் போல், செயல் மூலமும் பாதுகாத்து நிற்போம்.*

***- ஏங்கெல்ஸ்***

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை குறித்து கடுமையாகவும், காஸாவில் வஞ்சகத்தனமாகவும் நடந்து கொள்கின்றது




இந்த (மார்ச்) மாத ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு (United Nations High Commissioner for Refugees - UNHCR) 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தீர்மானத்தின் பிரச்சனையை மீண்டும் கையில் எடுத்தது. பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் குறைந்தபட்ச இழப்புடன் போர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதிகள் போதனை செய்வதையும் நாங்கள் பலமுறை கேட்டுள்ளோம்.

இதனை நம்புகின்றீர்களோ இல்லையோ, இலங்கையர்களாகிய நாங்கள்தான் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மோதல்களுக்கு உள்ளாகியிருக்கிறோம். இந்த மோதல்களில் எங்கள் ஆண்களும் பெண்களும் (சகோதரர்கள், சகோதரிகள், கணவர்கள், மனைவிகள் மற்றும் குழந்தைகள்) குருதி, வியர்வை மற்றும் கண்ணீரை விலையாகச் செலுத்தியுள்ளனர். விசாரணையின் வலியை அனுபவித்தவர்கள் நாங்கள்தான். நாங்கள் எல்லாவற்றையும் பார்த்திருக்கின்றோம், இன்னும் வலியை உணர்கின்றோம்.

போர் என்றால் கொல்வதும் கொல்லப்படுவதும் ஆகும். போரின் விதிகள் – பெண்கள், குழந்தைகள் மற்றும் போரிடாதவர்களின் பாதுகாப்பு – பெரும்பாலும் ஆயுத மோதல்களின் போது புறக்கணிக்கப்படுகின்றன. எவ்வாறெனினும், பொதுமக்களை இரக்கமின்றி கொலை செய்வது ஒரு போர்க்குற்றம் மட்டுமல்ல, மாறாக மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகும், அதை பொறுத்துக் கொள்ள முடியாது.

ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதில் கண்டதைப் போன்று, ஒரு போர்க்குற்றம் என்பது பொதுமக்களின் பாரியளவிலான படுகொலைகளுக்கு ஒப்பானது. இந்த தாக்குதலில் இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தனர். அன்று வீசப்பட்ட இரண்டு அணுகுண்டுகளின் பின் விளைவுகளால் மேலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போரின் கூட்டணியின் தலைமைத் தளபதியாக இருந்த டுவைட் டி. ஐசனோவர் (Dwight D. Eisenhower) கூட, அவரது போர்க்கால செயலாளர் ஹாரி ஸ்ரீம்சனிடம் கடுமையான சந்தேகங்களை வெளிப்படுத்தியதாக, தனது வாழ்க்கை வரலாற்றாசிரியரிடம் தெரிவித்திருக்கிறார்:
"முதலாவதாக எனது நம்பிக்கையின் அடிப்படையில், ஜப்பான் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்பதோடு அணுக்குண்டு வீசுவது முற்றிலும் தேவையற்றது. இரண்டாவதாக, உலக அபிப்பிராயத்தை அதிர்ச்சியூட்டும் வகையிலான ஓர் ஆயுதத்தைப் பயன்படுத்துவதை எமது நாடு தவிர்க்க வேண்டும் என்று நான் நினைத்தேன். அமெரிக்க உயிர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையாக அவ்வாறான ஆயுதத்தைப் பயன்படுத்துவது இனி கட்டாயமில்லை என்று நினைத்தேன். அந்த நேரத்தில், ஜப்பான் குறைந்தபட்ச முகச்சரிவுடன் சரணடைவதற்கு ஏதாவது ஒரு வழியைத் தேடுகின்றது என்பது எனது நம்பிக்கையாக இருந்தது."

மோதல் உக்கிரமடைந்த காலத்தில் இலங்கை இராணுவம் குறிப்பிட்ட 'யுத்த விதிகளை' மீறியதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், பெருமளவிலான மக்கள் குழுக்களை இலக்கு வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிந்தைபூர்வமான முடிவு எடுக்கப்படவில்லை.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளில் ஒன்று, மோதலின் இறுதி நாட்களில் ஏற்பட்ட மரணங்களைக் குறிக்கின்றது, அங்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உண்மையில் இறந்தனர். துன்பமளிக்கும் வகையில், கிளர்ச்சிக் குழு – தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) – பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். அதனால் அப்பாவி பொதுமக்களே பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளே 'உலகின் மிகவும் ஆபத்தான மற்றும் கொடிய தீவிரவாதிகள்' என்று FBI அறிக்கை ஒன்றில் விபரித்திருந்தது. அந்த அறிக்கையில், 'இல்லை, அது அல் கைடா அல்லது ஹிஸ்புல்லா அல்லது ஹமாஸ் கூட கிடையாது. இந்தக் குழு தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) அல்லது சுருக்கமாக தமிழ்ப் புலிகள் என்று அழைக்கப்படுகிறது.' கூறப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போர் இந்தப் பின்னணியில்தான் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயத்தை அறிந்திருந்தும், மோசமான விடயம் என்னவெனில், அமெரிக்காவும் மேற்குலகும் தமது சொந்த நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தொடர்ந்தும் புறக்கணித்து வந்தன. அங்கு புலிகள் தமது அலுவலகங்களை அமைத்து, தமது யுத்த முயற்சிகளுக்காக நிதிகள் திரட்டுவதை தொடர்ந்தனர்.

இலங்கை அரசால் மனித உரிமைகள்

நசுக்கப்படுவதையும், தமிழ் சமூகத்திற்கு எதிராக அட்டூழியங்கள் இழைக்கப்படுவதையும் நாங்கள் ஒரு கணமும் மன்னிக்க மாட்டோம். எனினும், இந்த நேரத்தில் – காஸாவில் பலஸ்தீன பொதுமக்களை இஸ்ரேல் கொடூரமாக படுகொலை செய்து கொண்டிருக்கையில் – இலங்கை குறித்த ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளின் பொருத்தமின்மையை பக்கச்சார்பானது மற்றும் வஞ்சகத்தனமானது என்பதைத் தவிர, வேறொன்றாகவும் பார்க்க முடியாது.

ஒக்ரோபர் 7, 2023 முதல் காஸா மற்றும் மேற்கு கரை மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 30,960 பொதுமக்கள் பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 72,524 பேர் காயமடைந்துள்ளனர். ஜனவரி 10ந் திகதி நிலவரப்படி இஸ்ரேலிய விமானத் தாக்குதல்கள் மற்றும் தரைவழித் தாக்குதல்களால் பத்தாயிரம் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று 'குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' (Save the Children) என்ற அமைப்பு கூறியுள்ளது. சுமார் 1.1 மில்லியன் குழந்தைகளுக்கு – காஸாவில் உள்ள முழு குழந்தை மக்கள் தொகை – போதுமான மனிதாபிமான உதவிகள் கிடைப்பது மறுக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனியர்களின் காஸாவில் தொடரும் படுகொலைகள் குறித்து யு.என்.எச்.சி.ஆர் (UNHCR) இதுவரையில் அதிர்ச்சி தரும் வகையில் மௌனம் சாதித்து வருகின்றது, அங்கு இஸ்ரேல் இரவும் பகலும் போர்க்குற்றங்களை தொடர்ந்து செய்து வருகின்றது.


*(இலங்கையிலிருந்து வெளியாகும் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் மார்ச் 11ந் திகதி வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம்)*

# உலகளவில் 4 ஆண்டுகளில் ஏற்பட்டதை விட காஸாவில் 4 மாதங்களில் அதிக குழந்தைகள் உயிரிழப்பு

கடந்த 4 ஆண்டுகளில் உலகம் முழுவதும் நடந்த போர்கள், மோதல்களால் ஏற்பட்ட குழந்தைகள் உயிரிழப்பைவிட, காஸாவில் பலியான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம் என்று பலஸ்தீனத்துக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் மறுவாழ்வு மைய பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் பிலிப் லாஸரினி (Philippe Lazzarini) என்ற ஐ.நா. பிரதிநிதி பகிர்ந்த பதிவில், "காஸாவில் கடந்த 4 மாதங்களில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை உலகம் முழுவதும் கடந்த 4 ஆண்டுகளாக நடந்த பல்வேறு மோதல்களில் உயிரிழந்த ஒட்டுமொத்த குழந்தைகளின் எண்ணிக்கையைவிட அதிகம். கடந்த 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரை உலகம் முழுவதும் நடந்த பல்வேறு மோதல்களில் 12,193 குழந்தைகள் இறந்தனர். ஆனால், காஸாவில் கடந்த 4 மாதங்களில் மட்டும் 12,300 இற்கும் அதிகமான குழந்தைகள் இறந்துள்ளனர். இந்தப் போர் குழந்தைகளின் மீதான போர். அவர்களின் பால்ய காலம், அவர்களின் எதிர்காலத்தின் மீதான போர். இந்தப் போர் தொடங்கி 3 வாரங்களிலேயே 3600 பலஸ்தீனிய குழந்தைகள் கொல்லப்பட்டுவிட்டனர். காஸாவில் பெற்றோராக இருப்பது ஒரு பெரும் சாபம்" என்று வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

காஸாவில் இதுவரை 31.184 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் என அப்பகுதி




சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,190 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 250க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள், வெளிநாட்டவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர். இந்நிலையில் 120 பேர் விடுதலையாகினர். 32 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எஞ்சியவர்களை மீட்க தொடர்ந்து இஸ்ரேலியர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இருப்பினும் இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தவில்லை.

காஸாவில் ரமழான் மாதம் போர், பசி, பஞ்சத்துக்கு மத்தியில் தொடங்கியுள்ளது. ரமழான் தொடங்கியும் கூட போரின் வன்முறையும், கொடூரமும் நிற்கவில்லை, குறையவில்லை. கடந்த ரமழான்களின் நினைவுகள் எங்களை அரவணைக்கின்றன என்று காஸாவாசிகள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளனர். ஐந்து மாதங்களுக்கு மேலாக போர் நீடித்துவரும் வடக்கு காஸாவில் இலட்சக்கணக்கான மக்கள் மிகமோசமான நிலையில் உள்ளனர்.

---

உங்களுக்கு எதிரான சக்திகளிடம் அமைப்பு, கட்டுப்பாடு, தொடர்ச்சியான அதிகார பலம் ஆகிய எல்லாச் சாதகங்களும் உள்ளன. அவற்றை எதிர்த்து பலமான சக்திகளைக் கொண்டு வராவிட்டால் , நீங்கள் முறியடிக்கப்படுவீர்கள், அழிக்கப்படுவீர்கள்.

---

வரலாறு நல்ல மனிதர்களின் வருகைக்காக ஒருபோதும் காத்திருப்பதில்லை. இருப்பவர்களில் ஒருவரை தேர்வு செய்து பயணிக்கிறது.

**– ஏங்கெல்ஸ்**

# பத்தாண்டு சிறைவாசம், பயங்கொள்ளா நெஞ்சுரம்!



கால்கள் செயல் திறனற்ற ஊனமுற்ற பேராசிரியரைக் கண்டு மோடி அரசு இவ்வளவு பயப்படுவானேன்? உரிய காரணங்களின்றி பத்தாண்டுகள் சிறைவாசம்! அவ்வளவு பயங்கரவாதியா இவர்? செய்த குற்றமென்ன? மனித உரிமை செயற்பாட்டாளராக இருப்பது மன்னிக்க முடியாத குற்றமா? அரசின் பதற்றத்திற்கு காரணமென்ன?

பேராசிரியர் ஜி.என். சாய்பாபா (G.N.Saibaba) மும்பை உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 5 வயதில் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டது முதல் சக்கர நாற்காலியே கதியாக வளர்ந்த சாய்பாபா தனது விடா முயற்சியாலும், தளராத நம்பிக்கையினாலும் படித்து டெல்லி பல்கலைக்கழக பேராசிரியரானவர்.

ஆந்திர மாநிலத்தில் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் ஓர் ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்து, உடல் ஊனத்தோடு வளர்ந்த இந்த சிறுவன் தனது இன்னல்களுக்கு மத்தியிலும், தன்னைச்சுற்றி நிகழும் சம்பவங்களையும், அதில் உழன்று தவித்த சக மனிதர்களின் வாழ்க்கை போராட்டத்தையும் கவலையுடன் பார்த்தான்.

1990களில் தனது கல்லூரிக் காலங்களில் பண்ணையார்களின் அடகுமுறைக்கெதிராகவும், சாதிக்கொடுமைக்கெதிராகவும் ஏழை விவசாயிகள் கிளர்ந்தெழுந்து போராடிய போது, புரட்சிக் கவிஞன் கத்தார் அகில இந்திய மக்கள் எதிர்ப்பு முன்னணி (All India People Resistance Forum) என்ற அமைப்பை ஏற்படுத்தி போராடும் மக்களை அணிசேர்த்த போது அதில் தன்னையும் இணைத்துக் கொண்டார் சாய்பாபா.

1992 இல் இவ்வமைப்பின் ஆந்திர மாநில செயலாளரானார். போராட்டங்கள் குறித்து எழுதுவது, கூட்டங்களை ஏற்பாடு செய்வது, நிகழ்வை ஒருங்கிணைப்பது ஆகியவற்றில் மும்முரமாக இருந்த சாய்பாபா, டெல்லி தலைநகரிலும் கருத்தரங்குகள் நடத்தினார் .

ஏழை விவசாயிகள் மற்றும் ஆதிவாசிகள் கோரிக்கைகளை முன்னிறுத்தி. அவர்களை ஒருங்கிணைத்து ஏகாதிபத்திய உலகமயமாக்க எதிர்ப்பு மாநாட்டை 2002 ஆம் ஆண்டு மே மாதம் புது டெல்லி ராம் லீலா மைதானத்தில் நடத்தினார். அங்கு இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில் டெல்லி போலீஸ் வன்முறையில் நூற்றுக்கணக்கானோர் மண்டை உடைக்கப்பட்டது, ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

*ச.அருணாசலம்*

இந்த காலகட்டத்தில் தான் தாராளமயமாக்கல் இந்தியாவில் வாஜ்பாய் அரசால் முன்னெடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களும், விவசாயிகளும் போராட்டங்களை காவல்துறையால் ஒடுக்கப்பட்டனர். இந்த அடக்குமுறையை எதிர்ப்போரை பொடா (Prevention Of Terrorist Act) சட்டத்தில் வாஜ்பாய் அரசு கைது செய்து சிறையில் அடைத்தது.

அரசின் கொள்கையால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்காக குரல் கொடுப்போரை 'பயங்கரவாதிகள்' என முத்திரை குத்தி விசாரணையின்றி, சிறையில் தள்ளியது வாஜ்பாய் அரசு!

பொடாவிற்கெதிரான பெரும் போராட்டம் வெடித்தது. 2004 இல் வாஜ்பாய் அரசு தோற்ற பிறகே! இந்த 'கறுப்பு பொடா சட்டம்' ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் இரத்து செய்யப்பட்டது.

இந்தச் சூழலில் டெல்லி பல்கலைக் கழகத்தில் பேராசிரியரான சாய்பாபா. பொடா சட்டம், ஆயுதப்படை சிறப்பு அதிகாரங்கள் சட்டம் போன்றவற்றுக்கு எதிராக தொடர்ந்து எழுதி வந்தார். இந்தச் சூழலில் மக்கள் போராட்டத்திற்கான 'அகில உலக லீக்' என்ற அமைப்புடன் (International League of People's Struggle- ILPS) தன்னை இணைத்துக் கொண்டார். ஆதிவாசிகள் மீது சத்தீஸ்கரிலும் மற்ற பகுதிகளிலும் அரசே முன்னின்று 'சல்வா ஜூடும்' என்ற ஆயுதக் கும்பல் மூலம் நடத்திய பயங்கரவாத செயல்களை எதிர்த்து தொடர்ந்து பத்திரிகைகளில்

எழுதினார்.

ஆதிவாசிகளுக்கு எதிரான அரசின் தாக்குதல்களையும், ஆதிவாசிகளை அப்புறப்படுத்தும் அரசின் செயலையும் கண்டித்து பல கூட்டங்களை புரட்சிகர ஜனநாயக முன்னணி (Revolutionary Democratic Front) என்ற அமைப்பின் சார்பில் நடத்தினார். இவற்றிற்கு மத்தியிலும் கல்வி கற்கும் செயற்பாடுகளிலும் தளராது ஈடுபட்டு முனைவர் (Phd) பட்டமும் பெற்றார். மாணவர்கள், பல்கலை ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை சாய்பாபா தட்டியெழுப்பினார். டெல்லி பல்கலைக்கழகத்தின் 'நான்காண்டு பட்டப்படிப்பு' என்ற அரைவேக்காட்டு திட்டத்தை மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஓரணியில் திரட்டி எதிர்த்தார்.

ஆந்திர அரசு 2012 இல் RDF என அழைக்கப்படும் புரட்சிகர ஜனநாயக முன்னணியை தடை செய்தது. ஆந்திராவில் சந்திர பாபு நாயுடுவின் தெலுங்கு தேச ஆட்சி ஒப்பிரேஷன் கிரீன் ஹன்ட் -operation green hunt- என்ற போலீஸ் அடக்குமுறையை மாவோயிஸ்டுகள் மீது கட்டவிழ்த்தது. இந்த தாக்குதலில் ஏராளமான மாணவர்களும். இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இக்கொடுமைகளுக்கெதிரான பிரதான குரலாக சாய்பாபாவின் குரல் அமைந்தது. அவரது எழுத்துக்கள் உண்மைகளை உலகிற்கு படம் பிடித்து காட்டின.

ஆட்சியாளர்களின் கழுகுப் பார்வை ஆட்சியின் கோர முகத்தை அம்பலப்படுத்தும் சாய்பாபாவின் மீது பாய்ந்தது. 2013 செப்டம்பர் 7 இல் திருட்டு பொருள்கள் உள்ளதா? என டெல்லியில் உள்ள சாய்பாபாவின் வீட்டை சோதனையிட மாஜிஸ்டிரேட் அனுமதி கொடுக்கிறார்.

செப்டம்பர் 12 இல் சோதனை நடத்தப்பட்டது. இரண்டு மடிக்கணினிகளையும், தொலைபேசிகளையும் பிடுங்கி சென்றனர் காவல்துறையினர்.

2013 செப்டம்பர் 17 இல் சாய்பாபாவிற்கு மகாராஷ்டிரா மாநில காவல்துறை விசாரணைக்கு அழைக்கும்போது வர வேண்டும் என 'சம்மன்' அனுப்புகிறது.

2013 ஒக்ரோபர் மாதத்தில் தேசிய மனித உரிமை ஆணையம் இந்த சம்மனை எதிர்த்து மகாராஷ்டிர காவல்துறைக்கும், டெல்லி காவல் துறைக்கும் நோட்டீஸ் அனுப்பியது. 2014 ஆம் ஆண்டு மே மாதம் 9 அன்று சாய்பாபா காவல் துறையால் அவரது வீட்டிலிருந்து கடத்தப்படுகிறார்.

இதை வன்மையாக கண்டித்து 2014 மே 14 இல் டெல்லிவாழ் அறிஞர்களும், டெல்லி பல்கலைக்கழக ஆசிரியர்களும் ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சிந்தர் சச்சார் தலைமையில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர், சாய்பாபா கடத்தப்பட்டு பின் கைவிடப்பட்டதை கண்டித்தனர்.

2014 மே 15 இல் அதாவது கடத்தலைக் கண்டித்து நடத்தப்பட்ட பத்திரிக்கையாளர் சந்திப்பிற்கு அடுத்த நாளே சாய்பாபா மாவோயிஸ்டுகளுக்கு உதவி செய்ததாகக் கூறி கைது செய்யப்பட்டார்.

இதனை வன்மையாக கண்டித்து மே 22 இல் டெல்லி பல்கலைகழக ஆசிரியர் கூட்டமைப்பு மிகப்பெரிய ஆர்ப்பாட்டமும், கண்டனமும் நடத்தினர்.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சாய்பாபா மாவோயிஸ்டுகளுக்கு உதவியதாக கூறி உபா சட்டம் (UAPA) பிரிவுகள் 13,18,20,38, &39 கீழும், மாவோயிஸ்டு மற்றும் புரட்சிகர ஜனநாயக முன்னணி ஆகிய தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி இந்திய தண்டனை சட்டம் IPC பிரிவு 120 இன் கீழும் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

இந்த தீர்ப்பை கண்டித்து, ஏராளமான கண்டனங்கள் எழுந்தன. இந்தியத் தலைநகர் டெல்லியிலும், மகாராஷ்டிராவிலும், ஆந்திராவிலும், சத்தீஸ்கர், ஒரிசா மற்றும் மத்திய பிரதேசத்திலும் மாணவர்கள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இந்தியாவிற்கு வெளியில் உள்ள மற்ற நாடுகளின் மனித உரிமை மற்றும் சமூக அமைப்புகளும் கண்டனம் எழுப்பி, சாய்பாபாவை விடுதலைக்கான கோரிக்கை வைத்தன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பும் (UN OHCHR) இந்திய அரசிடம் சாய்பாபாவை விடுதலை செய்ய கோரியது .

கிட்டத்தட்ட 90 சதவிகிதம் உடல் ஊனமான சாய்பாபாவின் உடல்நிலை மிகுந்த மோசமடைந்த நிலையிலும் அவருக்கு உரிய மருத்துவ வசதியோ, சேவையோ கிடைக்க அரசு அனுமதிக்கவில்லை. அவருடைய தாயார் இறந்த பொழுதும் அவர் ஈமச்சடங்குகள் செய்ய அரசு அனுமதி தரவில்லை.

2020 இல் மும்பை உயர்நீதி மன்றம் சாய்பாபாவின் மருத்துவ பிணை மனுவைக் கூட நிராகரித்தது. சிறையில் ஒரு தண்டனைக் கைதிக்கு கிடைக்க வேண்டிய சிறுசிறு உரிமைகள் கூட சாய்பாபா "சாகும்வரை உண்ணாவிரதம்" இருந்த பின்னரே கொடுக்கப்பட்டது.

அரசின் கோபம் இத்துடன் நிற்கவில்லை, ஏப்ரல் 2021 இல் டெல்லி பல்கலைக்கழக பணியிலிருந்தும் சாய்பாபா நீக்கப்பட்டார். அவரது பேராசிரியர் பட்டமும் ஜூலையில் பிடுங்கப்பட்டது.

ஒக்ரோபர் திங்கள் 2022 இல் மகாராஷ்டிர உயர்நீதி மன்றம் சாய்பாபா மற்றும் ஐந்து பேரை நிரபராதிகள் என கூறி, தண்டனையை ரத்து செய்து விடுவித்தது. உபா சட்டத்தின் கீழ் உரிய அனுமதிகள் பெறாமலேயே குற்ற விசாரணை செய்து தண்டிக்கப்பட்டதால் அது செல்லாது என உயர்நீதி மன்றம் சாய்பாபா மற்றும் ஐவரை ஒக்ரோபர் 22, 2022 வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது. நீதிபதி தியோ தனது தீர்ப்பில், 'தேசீய பாதுகாப்பிற்கு குந்தகம் வந்துவிடுமே என்ற நினைப்பில் உரிய சட்ட நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்காமல் வழக்குகள் நடத்தி, தண்டனைகள் வழங்கமுடியாது' என்று குறிப்பிட்டார்.

ஆனால் மகாராஷ்டிர அரசோ 'குய்யோ முறையோ' என அலறிக் கொண்டு அன்றிரவே – தீர்ப்பு நகல் வெளிவருமுன்னரே – இந்த தீர்ப்பை இரத்து செய்ய வேண்டும், சாய்பாபாவை விடுதலை செய்யக்கூடாது என உச்ச நீதிமன்றத்தின் கதவுகளை இரவோடிரவாக தட்டியது.

உச்ச நீதி மன்றமும் அனைத்து இயற்கை நீதி முறைகளையும் காற்றில் பறக்கவிட்டு, விடுமுறை நாளான சனிக்கிழமை காலையிலேயே

விசாரணைக்கு எடுத்துக் கொண்டது!.

“உயர்நீதிமன்றம் குற்றத்தின் தீவிரத்தை கணக்கில் எடுக்காமல், தடயங்களை சரியாக கணிக்காமல், குற்றவாளிகளை விடுதலை செய்தது தவறு” என்று நீதிபதிகள் பாலா எம். திரிவேதி மற்றும் எம்.ஆர். ஷா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்து.

மேலேகான் குண்டுவெடிப்பில் குற்றவாளியான பிரகஞா தாக்கூர் வழக்கிலிருந்து விடுபடுவதும், சி.பி ஐ மேல் முறையீடு எதுவும் செய்யாததும். சொராபுதீன் என்கவுண்டர்வழக்கில் அமீத் ஷா நீதிபதி லோயா மரணத்திற்குப் பின் குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவதும் இந்திய நீதி பரிபாலனத்தின் செயல்பாடு தான்! ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவதும் மற்றொருவர் உள் துறை அமைச்சராவதும் இந்தியாவில் நரேந்திர மோடி ஆட்சியில் தான் நடைபெற்றுள்ளது.

உடல் ஊனமுற்ற பேராசிரியர் சாய்பாபா விடுதலையானால், இந்தியாவிற்கே ஆபத்து என்பதும் ‘நீதியின்’ குரல் தான் போலும்.

இப்பொழுது 2024 மார்ச் 5 இல் மும்பை உயர்நீதி மன்றத்தின் நாக்பூர் அமர்வு, சாய்பாபா உள்ளிட்ட மற்றவர்களையும் (ஒருவர் சிறையில் மாண்டு போனார்) குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி மீண்டும் விடுதலை செய்துள்ளது, தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு மொக்கையான சாட்சியங்களையும், முறையற்ற சட்ட நடைமுறையையும் சார்ந்து வழக்கை நடத்தியுள்ளது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது, நீதிபதிகள் வினய் ஜோஷி, வால்மீகி மற்றும் மெனீசஸ் அடங்கிய அமர்வு!

குற்றவாளிகளின் மீது உபா சட்டத்தின் கீழ் வழக்கு தொடர கொடுக்கப்பட்ட அனுமதி (sanction for prosecution under UAPA) செல்லாது எனவும், தகுந்த சாட்சியங்கள் இல்லை என்றும் கூறி தண்டனையை இரத்து செய்து அவர்களை விடுதலை செய்துள்ளனர்.

இப்பொழுதும் மகாராஷ்டிர அரசு தீர்ப்பு நகல் கையில் கிடைக்கும் முன்னரே உச்ச நீதிமன்றத்தின் கதவுகளை தட்டியுள்ளது.

ஆனால், இந்த நேரம் வரை உச்சநீதி மன்றம் விசாரணைக்கு இந்த முறையீட்டை எடுத்துக் கொள்ளவில்லை!

# உலகம் முழுவதும் பத்திரிகையாளர்கள் படுகொலை 44 சதவீதம் அதிகரிப்பு

உலகம் முழுவதும் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2023 ஆம் ஆண்டு 44 சதவீதம் அதிகரித்துள்ளது என பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு (Committee to Protect Journalists - CPJ) அறிக்கை தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டு 69 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

2023 இல் இந்த எண்ணிக்கை 99 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 2023 ஆம் ஆண்டு படுகொலையான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பேர் பலஸ்தீனர்கள் என்றும் இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலை போரில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

2023 இல் கொலை செய்யப்பட்ட 99 பத்திரிகையாளர்களில் 78 பேர் காஸாவில் மட்டும் கொலையாகியுள்ளனர். இதில் 72 பேர் பலஸ்தீனம், 3 பேர் லெபனான் மற்றும் 2 பேர் இஸ்ரேல் பகுதியை சேர்ந்த பத்திரிகையாளர்கள். காஸாவில் பத்திரிகையாளர்களின் வீடுகள் மற்றும் குடும்பங்களின் மீது நேரடியாகவே இஸ்ரேல் இராணுவம் குண்டு வீசியும் தரைவழித் தாக்குதல்களையும் நடத்தியுள்ளது.

பத்திரிகையாளர்கள் என அடையாளம் காணக்கூடிய வகையில் கவச உடை அணிந்திருந்த போதும் அவர்கள் கொலை செய்யப்பட்டனர். இதுகுறித்து முழு விவரங்களை பெற முயற்சித்த போது இஸ்ரேல் அரசு ஒத்துழைக்க மறுத்தது எனவும், இதனால் ஏன் காஸாவில் அதிக பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற உறுதியான பின்னணியை விவரிக்க முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டதாகவும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இந்த தாக்குதலில் பல பத்திரிகையாளர்கள் தங்கள் முழு குடும்பங்களையும் இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாக உள்ளது. மேலும் இவர்கள் வேண்டுமென்றே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியில் உள்ள ஊடகவியலாளர்களை வேண்டுமென்றே குறி வைத்து கொலை செய்வது சர்வதேச சட்டப்படி போர்க்குற்றமாகும். இதனால் காஸாவில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்களை எந்த ஆதாரமும் இன்றி அவர்கள் பயங்கரவாத குழுக்களின் உறுப்பினர்கள் என இஸ்ரேல் பொய்யைப் பரப்பி வருகிறது பலஸ்தீன ஊடக அலுவலக தகவலின் படி, 2023 ஒக்ரோபர் 7 முதல் 2024 பெப்ரவரி வரை பலஸ்தீனத்தில் படுகொலை செய்யப்பட்ட மொத்த ஊடகவியலாளர்கள் எண்ணிக்கை 126 ஆகும். ஊடகவியலாளர்களை கொலை செய்வது மட்டுமின்றி வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு விசா மறுப்பது, இணையம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளை அடிக்கடி நிறுத்தி தகவல்கள் பரிமாற்றத்தை நிறுத்துவது என அனைத்து அராஜகங்களையும் இஸ்ரேல் அரங்கேற்றி வருகின்றது.

---

தேசம் தழுவிய நெருக்கடி (சுரண்டப்படுவோர், சுரண்டுவோர் ஆகிய இரு சாராரையும் பாதிக்கும் நெருக்கடி) இல்லாமல் புரட்சி சாத்தியமன்று. இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், புரட்சி நடைபெறுவதற்கு, முதலாவதாக, பெரும்பான்மையான தொழிலாளர்கள் (அல்லது குறைந்தது, வர்க்க உணர்வு கொண்ட, சிந்தனை ஆற்றலுடைய, அரசியல் செயலாற்றல் வாய்ந்த தொழிலாளர்களில் பெரும்பாலோர்) புரட்சி இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்திருப்பதும், புரட்சிக்காக உயிர்விடத் தயாராயிருப்பதும் அவசியமாகும்.

(முதலாளித்துவ ஜனநாயகத்தில்) சில ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒடுக்கும் வர்க்கத்தின் எந்த குறிப்பிட்ட பிரதிநிதிகள் தங்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தலாம் தங்களை ஒடுக்கலாம் என்பதை தீர்மானிப்பதற்கு ஒடுக்கப்படுவோர் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**-லெனின்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

தீர்க்கப்பட்டுவிட்டன. இரு நாடுகளுக்கும் இடையில் தீர்க்கப்படாமல் இன்று வரையும் இருந்து வரும் பிரச்சினை என்றால் அது தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடிக்கும் பிரச்சினையாகும். அதுவும் கூட இந்தியா நினைத்தால் ஒரே நாளில் தீர்க்கக்கூடிய பிரச்சினையாகும். ஆனால் இந்தியா சில உள்நாட்டு – வெளிநாட்டு அரசியல் காரணிகளுக்காக அதைத் தீர்க்காமல் நீடிக்க விட்டிருக்கிறது.

அண்மைய வரலாற்றில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய பிரச்சினை, இலங்கையில் தமிழ் இயக்கங்களின் தனிநாட்டுக்கான ஆயுதம் தாங்கிய போராட்டமும் அதற்கு இந்தியா சகல வழிகளிலும் ஆதரவளித்ததும் ஆகும். இந்தச் சூழ்நிலை உருவாவதில் இலங்கையில் அந்தக் காலகட்டத்தில் இந்தியாவுக்கு எதிரான, அமெரிக்காவின் தீவிர விசுவாசியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியில் இருந்ததும் ஒரு காரணம் என்ற போதிலும், ஒரு சுதந்திர நாடு என்ற வகையில் இலங்கையின் இறைமையின் மீதான இந்திய அரசாங்கத்தின் அத்துமீறல் செய்கை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

இந்தியாவின் செயற்பாட்டால் இந்தியப் படைகள் இலங்கையில் அமைதி காக்கவென வந்து பின்னர் ஒரு யுத்தத்தில் ஈடுபட வேண்டிய சூழல் உருவானதுடன், இந்தியா தனது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையும் புலிகளின் கொலைத் தாக்குதலில் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலைகளின் விளைவாக ஏக காலத்தில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் முன்னொருபோதும் இல்லாதவாறு இந்திய எதிர்புணர்வு உருவானதுடன், ஏற்கெனவே இந்திய எதிர்ப்புணர்வுடன் உருவாகியிருந்த ஜே.வி.பி. இயக்கம் மேலும் தீவிர இந்திய எதிர்ப்பு நிலையை எடுக்கும் நிலைமையும் ஏற்பட்டது.

ஆனால் நிலைமைகளின் வளர்ச்சிப் போக்குகள் மாற்றங்களைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் என்ற யதார்த்தத்துக்கு ஏற்ப, உலக அரசியல் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களினாலும், ஏற்கெனவே இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவி வந்த மோதல் போக்கினாலும், இலங்கை – இந்திய உறவுகளிலும் பல மாற்றங்கள் ஏறபட்டுள்ளன. முக்கியமாக, இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான இந்துத்துவ வலதுசாரி அரசாங்கம் ஏற்பட்ட பின்னர், அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு தீவிர நெருக்கத்தை அடைந்தது. அதற்கான பிரதான காரணம் இரு நாடுகளும் இணைந்து சீனாவின் வளர்ச்சியைத் தடுப்பதுதான்.

அவற்றின் இந்த நோக்கத்தின் பிரதான ஆடுகளமாக அவை தென்னாசியாவில் இலங்கையை ஒரு பகடைக்காயாக மாற்றியுள்ளன. அந்த நாடகத்தின் ஒரு அரங்கேற்றமே இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் அதிக கரிசனை காட்டிய மகிந்த ராஜபக்சவை 2015 ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து தோற்கடித்த நிகழ்வு. இன்னொரு அரங்கேற்றம் 2022 இல் கோத்தபாய ராஜபக்ச தலைமையில் அமைந்திருந்த அதே வகையான அரசாங்கத்தை 'அரகலய' என்ற கிளர்ச்சியின் மூலம் ஆட்சியிலிருந்து வெளியேற்றியது.

அத்துடன் அவர்களது முயற்சிகள் முடிந்து விடவில்லை. இலங்கை மக்கள் எப்பொழுதும் மேற்கத்தைய ஏகாதிபத்தியத்துக்கும், இந்திய விஸ்தரிப்புவாதத்துக்கும் எதிராக இருப்பவர்கள் என்பது இந்தச் சக்திகளுக்குத் தெரியும். அத்துடன் 2015 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் இலங்கையின் தேசபக்த சக்திகள் ஆட்சிக்கு வரமுடியாதவாறும், வந்த சக்திகளை ஆட்சியைத் தொடர முடியாதவாறும் இந்தச் சக்திகள் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறித்து நாட்டு மக்களிடையே நியாயமானதும் கணிசமானதுமான கோபம் உண்டு என்பதும் இந்த சக்திகளுக்குத் தெரியும். ஆனபடியால் இனி வரும் காலங்களில் நடைபெறப்போகும் தேர்தல்களிலும் இந்த தேசபக்த சக்திகளின் பக்கமே மக்கள் நிற்பார்கள் என்பதும் தெரியும்.

அதனால் இந்தத் தேசபக்த சக்திகளுக்கு மாற்றாக சோசலிச வேடத்துடனிருக்கும் ஜே.வி.பி. என்ற சிங்கள இனவாத இயக்கத்தை அவர்கள் ஆட்சிக்கு கொண்டு வருவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதுவரை காலமும் இந்தியாவை தமது பரம வைரியாக கணித்து பிரச்சாரம் செய்து வந்த ஜே.வி.பியை இந்தியா தனது நாட்டுக்கு வரவழைத்து செங்கம்பள வரவேற்புக் கொடுத்ததும், அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் ஜே.வி.பிக்கு ஆராதனை செய்வதும் அதனால்தான். ஜே.வி.பியும் பதவி வெறி காரணமாக தனது இந்திய எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளை ஒருபக்கம் வீசி எறிந்துவிட்டு இந்த சக்திகளுடன் கூடிக்குலாவி வருகின்றது.

இந்தியாவின் இந்த செய்கை முன்பு எப்படி தனிநாடு கோரி போராடிய தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களை ஆதரித்து இலங்கையின் இறைமையை கேள்விக்குள்ளாக்கி எமது நாட்டை 30 வருடப் போருக்குள் தள்ளி நாசமாக்கியதோ, அதேபோல இப்பொழுது தன்னிச்சையாக ஜே.வி.பி. என்ற தேச விரோத, மக்கள் விரோத, சிங்கள இனவாத இயக்கத்துக்கு அடுத்த தேர்தல்களில் வெல்வதற்காக அரசியல் ஆதரவும் பண ஆதரவும் கொடுக்கும் இந்தியாவின் செய்கை அமைந்துள்ளது. இதுவும் ஒரு வகையில் இலங்கையின் இறைமையை இந்தியா மீறும் செயல்தான்.

இந்தியாவும் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளும், இலங்கை என்ற இந்தச் சின்னஞ்சிறு நாடு தான் எதிர்நோக்கிய சவால்களை மக்களின் ஆதரவுடன் துணிகரமாக முறியடித்து சுதந்திரமாக முன்னேறி வளர்ச்சி பெறுவதை இந்த உலக மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகள் விரும்பவில்லை என்பதையே இத்தகைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. திரும்பவும் மக்கள்தான் ஒன்றுபட்டு இந்தச் சவால்களை முறியடிக்க வேண்டும். வேறு வழியில்லை.

(இந்தியா திட்டமிட்ட முறையில் இலங்கையை தனது ஒரு நவ காலனியாக்க எடுத்து வரும் பல்வேறு முயற்சிகள் குறித்து இந்தக் கட்டுரையில் ஆராய்வதற்கு வசதி ஏற்படவில்லை. அவற்றை இன்னொரு கட்டுரையில் பார்க்கலாம்)

---

நம்மிடம் மென்மையைக் கடைபிடிக்காத முதலாளி வர்க்கத்தை அன்பு வழிமுறைகளில் வெல்வது சாத்தியமில்லை.

**- ஏங்கெல்ஸ்**

# ரஷ்யத் தேர்தலில் புட்டின் அமோக வெற்றி

விளாடிமிர் புட்டின் மீண்டும் ரஷ்யத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். 17.03.2024 அன்று நிறைவடைந்த தேர்தலில் தனக்கு எதிராக மூன்று வேட்பாளர்கள் போட்டியிட்டபோதும், பெரியளவிலான எந்த எதிர்ப்பும் இன்றி, இந்த முறை 87 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று, உலக அரசியல் தலைவர்களிலேயே மிகப் பெரிய அளவிற்கு மக்கள் செல்வாக்குடன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்படி அடுத்த ஆறு ஆண்டுகளுக்கும் புட்டின் பதவியில் இருந்தால், கடந்த 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றில் ரஷ்யாவில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த ஜோசப் ஸ்டாலினின் (1922-1953) சாதனையை முறியடிப்பார்.



இரண்டு ஆண்டுக்கும் மேலாக உக்ரைன் போர் நடந்து கொண்டிருக்கும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் இந்த வெற்றியை புட்டின் பெற்றிருப்பது, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய சக்திகளிடமிருந்து ரஷ்யாவைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளுக்காக, புட்டினுக்கு கிடைத்துள்ள ரஷ்ய மக்களின் அங்கீகாரம் என்று சர்வதேசிய அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

உலக அரசியல் அரங்கில் அனைத்து நாடுகளையும் தனது செல்வாக்கின் கீழ் கொண்டு வந்து அடக்கி ஆள முனைகின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம். அதன் ஒரு பகுதியாக ஆசியாவைச் சுற்றி வளைப்பதெனும் மிகப்பெரும் புவி அரசியல் சூழ்ச்சித் திட்டத்தை அரங்கேற்றியும் வருகின்றது. அத்திட்டத்தின் மற்றுமொரு பகுதியே சோசலிச சீனா, அதன் நெருக்கமான நட்பு நாடான ரஷ்யா மற்றும் இவற்றுடன் நெருக்கமாக உள்ள ஏனைய நாடுகளை அமெரிக்கா குறிவைத்திருப்பது.

ரஷ்யா தற்போது ஒரு சோசலிச நாடு அல்ல என்ற போதிலும், சோவியத் ஒன்றிய கால கட்டத்திலிருந்தே ரஷ்ய மக்களும், சோவியத் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த புட்டின் அரசும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கு எதிராக வலுவான முறையில் போராடியும், செயல்பட்டும் வருகின்றனர். இந்தப் பின்னணியில் தான், வரலாறு நெடுகிலும் பல கொடூரமான போர்களை நடத்தி இலட்சக்கணக்கான மக்களை அழித்தொழித்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவக் கூட்டணி, ரஷ்யாவின் அண்டை நாடான - முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்றான - உக்ரைனில் 2014 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றினை மேற்கோண்டிருந்தது. அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு அமெரிக்க கைக்கூலியான ஜெலன்ஸ்கியை ஆட்சியில் அமர்த்தி, அவர் மூலமாக ரஷ்யாவுக்கு எதிரான போரைத் தூண்டி, ஓராண்டிற்கும் மேலாக நேட்டோ போரை நடத்தி வருகின்றது.

ரஷ்யாவின் மீது திணிக்கப்பட்ட போர் இது. இந்தப் போரைத் தவிர்க்கவும், நிறுத்தவும் ரஷ்யா 2014 ஆம் ஆண்டிலிருந்து எட்டு ஆண்டுகளாக தொடர்ந்து பல முயற்சிகளை செய்தது. ஆனால் அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்யா - உக்ரைன் இடையே சமாதானத்தை ஏற்படுத்துவது போல் நடித்து, உக்ரைன் இராணுவத்தை பலப்படுத்தினார்கள். 2022 பெப்ரவரியில் ரஷ்யா உக்ரைன் மீது விசேட இராணுவ நடவடிக்கையை தொடங்காவிடின், உக்ரைன் ரஷ்யா மீது படையெடுத்திருக்கும் என்பதே உண்மை.

ரஷ்யாவைச் சுற்றி வளைக்கவும், பொருளாதார ரீதியாக தடைகளை விதித்து அந்நாட்டை நிலைகுலையச் செய்யவும் அமெரிக்காவும், அதன் ஐரோப்பிய கூட்டாளிகளும் மேற்கொண்டுள்ள பல்வேறு விதமான தாக்குதல்களை சாதுரியமாக எதிர்கொள்ள வேண்டிய தேவையும் ரஷ்யாவுக்கு உள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகரமான திட்டங்கள், நகர்வுகளை அறிந்து துல்லியமாக புட்டின் எதிர்கொண்டு வருகிறார் என்பதில் ஐயமில்லை. இந்தநிலையில் ரஷ்யாவில் நிலையான ஆட்சியமைக்க பெருவாரியான வாக்குகளுடன் அவர் மீண்டும் வெற்றி பெற்றிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

---

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் உழைப்பு பிரிவினை தான் முதல் உழைப்புப் பிரிவினையாகும். குடும்ப அமைப்பில் பெண் மீது ஆண் செலுத்தும் ஒடுக்குமுறை தான் முதல் வர்க்க பிரிவினையாகும், இந்த முரண்பாடுகள் தான் சமூகத்திலும் எதிரொலிக்கிறது.

---

சமூக உழைப்பிலிருந்து பெண்கள் விலக்கப்பட்டு, வீட்டு வேலை செய்வதுடன் நிறுத்தப்படுகின்ற வரை, பெண் விடுதலை சாத்தியமில்லை.

---

பெண்களைப் பொதுவாக்கும் நடைமுறைக்கு, கம்யூனிச சமுதாயம் முடிவு கட்டும்.

---

புரட்சிகர எழுச்சி என்பது மிகவும் திட்டவட்டமாக இல்லாத பரிமாணங்களைக் கொண்ட நுண் கணிதமாகும். இவற்றின் மதிப்பு நாள்தோறும் மாறலாம்.

**-ஏங்கெல்ஸ்**

# ரஷ்யா - உக்ரைன் மோதல் இரண்டு ஆண்டுகள்




**24** பெப்ரவரி 2024 அன்று உக்ரைன் ரஷ்யா போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. இந்த இரு ஆண்டுகளில் உக்ரைன் அமைதி பேச்சுவார்த்தைக்கு எங்குமே இடம் கொடுக்கவில்லை. தற்போது வரை பல இலட்சம் உக்ரேனிய இராணுவத்தினர் இப்போரில் மடிந்த போதிலும், சுமார் 10 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளதாகவே உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி அண்மையில் தெரிவித்துள்ளார். எனினும் உக்ரைன் எந்த ஓர் அமைதிப் பேச்சு வார்த்தைக்கும் தான் தயாராக இல்லை என்றே கூறிவருகின்றது. குறிப்பாக உக்ரைனின் கூட்டாளி நாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த விடாமல் உக்ரைனை முடக்கி வருகின்றன.

கடந்த பெப்ரவரி 16 – 18ந் திகதிகளில் ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெற்ற வருடாந்திர முனிச் பாதுகாப்பு மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி உரையாற்றிய போது கூட, அமைதிப் பேச்சுவார்த்தை பற்றிய யோசனையை அவர் ஏற்க மறுத்து விட்டார். அதற்குப் பதிலாக போரைத் தீவிரமாக்க அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட கூட்டாளி நாடுகளிடம் இருந்து அதிக ஆயுதங்களையும் நிதி உதவிகளையும் கேட்டுள்ளார்.

அத்தோடு உக்ரைனில் செயற்கையான ஆயுத பற்றாக்குறையை தனது கூட்டாளி நாடுகள் உருவாக்குவதாக ஜெலென்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார். குறிப்பாக, பீரங்கிகள், நீண்ட தூரம் சென்று தாக்க கூடிய ஏவுகணைகளை கூட்டாளி நாடுகள் தர மறுக்கின்றன, இது போரச் சூழலை ரஷ்யாவிற்கு சாதகமாக மாற்றும் நிலையை உருவாக்கி வருகின்றது என கடுமையான குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார். அந்நாடுகள் ஏற்கனவே உக்ரைனுக்கு போர் விமானங்கள் உட்பட பல ஆயுதங்களை வழங்கியுள்ளன இந்நிலையில் தான், ஜெலன்ஸ்கியின் குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

**அமைதி பேச்சுவார்த்தைக்கு சீனா முயற்சி**

முனிச் மாநாட்டின் போது, சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி (Wang Yi), உக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபாவை (Dmytro Kuleba) சந்தித்து, ரஷ்யா – உக்ரைன் நாடுகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான சீனாவின் ஆதரவை மீண்டும் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடங்கி சில மாதங்களின் பின்னர், அமைதிக்கான பேச்சுவார்த்தையில் இருந்து உக்ரைனை விலகுமாறு, அதன் கூட்டாளி நாடுகள் வற்புறுத்தி வந்ததன் காரணமாக, உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் துருக்கியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன. அதன் பின்னர் எந்தப் பேச்சுவார்த்தையும் தற்போது வரை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரைனுக்கான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டாளி நாடுகளின் ஆயுத விநியோகத்தை நிறுத்துவதற்கும், ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெறுவதற்கும், இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தும் வகையில் 12 அம்ச சமாதான முன்மொழிவை 2023 பெப்ரவரி மாதம் சீன அரசு சமர்ப்பித்தது.

எனினும் உக்ரைனை விட்டு ரஷ்ய இராணுவம் வெளியேறி, போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளும் வரை ரஷ்யாவுடனான எந்த பேச்சுவார்த்தையும் இல்லை என உக்ரைன் கூறி வருகின்றது. ஆபிரிக்க ஒன்றியம் உட்பட பல நாடுகள் முன்மொழிந்த பல சமாதான திட்டங்களையும் உக்ரைன் நிராகரித்துள்ளது.

இது குறித்து ரஷ்யா கருத்து தெரிவித்தபோது, அமைதிக்காக உக்ரைன் முன் வைக்கும் நிபந்தனைகள் உண்மைக்கு மாறானவை என்று தெரிவித்துள்ளது.

**உக்ரைனை தூண்டிவிட்டு**

இதற்கிடையே உக்ரைனின் கூட்டாளி நாடுகள் போரை நிறுத்தி அமைதியை கொண்டுவர எந்த அழுத்தத்தையும் கொடுக்காமல், ரஷ்யாவை தோற்கடிக்க வேண்டும் என்ற உக்ரைனின் நோக்கத்தில் தாங்கள் உறுதியுடன் இருப்பதாக காட்டிக்கொண்டு, ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைனை தூண்டிவிட்டு வருகின்றன.

உதாரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளில் ஒன்றான ஹங்கேரியின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை 2025 வரை நீடிக்கவும், புதிய தடைகளை விதிக்கவும் ஐரோப்பிய ஒன்றியம் முடிவுகளை எடுத்துள்ளது.

உக்ரைனுக்கு ஆதரவாக தங்கள் அரசுகள் எடுத்து வரும் முடிவுகளுக்கு எதிராக பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் மக்களும் விவசாயிகளும் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். உக்ரைன் – ரஷ்யா போரால் உலகம் முழுவதும் பொருளாதார பிரச்சனைகள் உருவாகியுள்ளன. எனினும் உக்ரைனின் கூட்டாளி நாடுகள் தொடர்ந்து உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை செய்து வருகின்றன. இது பொருளாதார நெருக்கடிகளை மேலும் தீவிரமாக்கி வருகிறதென ஐரோப்பிய நாடுகளில் போராடி வரும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். எனினும் போர்நிறுத்தம் மற்றும் அமைதியை நோக்கி செல்ல மறுத்து, உக்ரைனில் ஜெலென்ஸ்கி தலைமையிலான பொம்மை ஆட்சியைப் பயன்படுத்தி, போரை தீவிரப்படுத்தி ரஷ்யாவை பலவீனமடையச் செய்வதிலேயே அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கவனம் செலுத்தி வருகின்றன.